Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் கஉ	பிரமாதி ஆண்டு ஐப்பசித் திங்கள் 1939ஆம் அக்டோபர்மீ	இதழ் கo

திருக்குறிப்பு

[பத்திராசிரியர்]

“குறிப்பறிந்து நடக்கவேண்டும்” என்று மன்பதையில் மக்கள் கூறுவது வழக்கம். அங்ஙனம் நடப்போரே நாட்டில் சாலச்சிறந்தவரெனக் கருதப்படுவர். இக் குறிப்பறிந்து, காலமறிந்து செய்யும் செயல்களையும் பேசும் பேச்சுக்களையும் கண்டு மகிழ்வர் நுண்ணறிவுடையார். இதனை,

“ குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல் ”

என்னும் திருக்குறள் உணர்த்தும்.

இன்னும், ஒருவன் உள்ளத்தில் நினைப்பதை அவனது முகத்தைக் கண்டு அறியும் திறமை வாய்ந்தவர் தெய்வத்தோ டொப்பர்; குறிப்பால் குறிப்பறிவாரை வேண்டுவன

கொடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் அறிவுறுத்தற் பொருட்டு,

> " ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
> தெய்வத்தோ டொப்பக் கொளல் "

> " குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
> யாது கொடுத்துங் கொளல் "

என்னும் குறட்பாக்களால் திருவள்ளுவனாரே உணர்த்தி யருளினார்.

குறிப்பறிந்து நடவாதார் சில சமயங்களில் இடர்ப்பட்டு வருந்துவர். இல்வாழ்க்கையில் நாயகன் நாயகியிடையே குறிப்பறிவு இருத்தல் மிக்க அவசியம். குறிப்பறியுந் தன்மையில்லாத பெண் குறிப்பறிந்து நடக்கும் ஆடவனுக்கு வாழ்க்கைப் படுவாளாகில், அந்நாயகன் பல தொல்லைக்குட்பட்டுத் தன் வாழ்நாளைக் கழிப்பதில் கவலையுடையவனவன். அங்ஙனமே குறிப்பறிந்து நடக்கும் பெண்ணொருத்தி குறிப்பறியா ஆடவனை மணந்து வாழ்வதும் பெருந்தொல்லையாம்.

இக்குறிப்பறிதல் இம்மை வாழ்வில் மக்கட்குப் பெரும்பயன் அளிக்கக்கூடியது மட்டுமன்றி, மறுமைக்கும் துணை புரிவதாகும். அதுவே திருக்குறிப்பு, திருவுளக் குறிப்பு என்று கூறப்படும். அக்குறிப்பை எல்லோரும் அறிய முடியாது. அதற்குப் பக்குவம் வேண்டும். பன்னெடு நாள் இறை வழிபாட்டில் ஈடுபட்டு முதிர்ச்சி பெற்ற மூதறிஞரே அக்குறிப்பை அறிந்து உணரவல்லார். இறவாத இன்ப அன்பில் திளைத்தவரும் ஆணவமல மற்றவரும் எம்பிரான்றன் திருக்குறிப்பையறியும் ஆற்றலுடையவர். அத்தகைய ஞானச்செல்வர்களின் உள்ளக்குறிப்பை எம்பிரானும் அறிந்து அருள்செய்வார். இதனை அப்பமூர்த்திகள், தில்லையம்பதிக்குச் சென்று நட்டமாடிய நம்

பணித்தொழுது உள்ளமுருகிப் பாடியபோது அம்பல வாணர் திருக்குறிப்பெழுந்து ஒலித்ததை,

“ ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லை
கன்றியகால னைக்காலாற் கடிந்தானடி யவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்துநட்டம்
என்றுவந்தா யென்னுமெம் பெருமான்றன் திருக்குறிப்பே ”

என்னும் திருவிருத்தத்தா லுணர்த்தியருளினர். இங்ஙனமே கச்சியம்பதியில் திருத்தொண்டு செய்து முத்தியடைந்த திருக்குறிப்புத் தொண்டரும் அடியார்களுடைய திருக்குறிப்பறிந்து அவர்களுடைய ஆடையைத் தோய்த்து உலர்த்தி உதவியே அப்பெயரினை யெய்தினர்.

இதனை,

“ மண்ணின்மிசை வந்ததற்பின் மனம்முதலா யினமூன்றும்
அண்ணலார் சேவடியின் சார்வாக அணைவிப்பார்
புண்ணியமெய்த் தொண்டர்திருக் குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினால் திருக்குறிப்புத் தொண்டரெனுஞ் சிறப்பினார் ”

என்று சேக்கிழார் வியந்தோதியதால் உணரலாம்.

இன்னும், திருவாலவாய் என்னும் மதுரையம்பதியில் திருவிளையாடல் நிகழ்த்திய சோமசுந்தரக் கடவுளைக் கௌரி அம்மையார் என்னும் பெண்மணி முதலில் தன் மனக் குறிப்பிற் கண்டு பின்னர் விடைமேல் தெரியக் கண்டார் என்பதை,

“ தாயிலாப் பிள்ளைமுகந் தனைநோக்கித்
தெருவினிடைத் தளர்வா ருள்ளங்
கோயிலாக் கொண்டுறையுங் கூடல்நா
யகனைமனக் குறிப்பிற் கண்டு
வேயிலாக் கியதடந்தோட் கௌரிதிரு
மந்திரத்தை விளம்ப லோடுஞ்
சேயிலாக் கிடந்தழுத குழவிவிசும்
பிடைவிடைமேல் தெரியக் கண்டாள் ”

என்று பரஞ்சோதியார் மொழியும் பான்மையாலறிக.

இன்னும், சிவபெருமான் தென்முகத் தெய்வமாய் அமர்ந்தருளித் தம் இடத் திருக்கரத்தைத் திருமார்பிற் சேர்த்து, வலத்திருக்கரத்திலுள்ள ஐந்து விரல்களுள் அங்குட்டத்தையுந் தர்சனியையுஞ் சேர நிறுத்தி, மற்றைய கனிட்டை, அநாமிகை, மத்திமையென்னும் மூன்று திருவிரல்களையும் விரித்து ஞானமுத்திரையாம் குறிகாட்டிச் சனகாதிமுனிவருக்கு உபதேசஞ் செய்தருளினர். அச்சின்முத்திரையால் உணர்த்திய திருக்குறிப்பே முனிவர்களுடைய ஐயத்தைப் போக்கியது. எம்பெருமான் முனிவர்கள்பொருட்டு மோனநிலையில் கைகாட்டிய காட்சியே உலகில் பக்குவப்பட்ட உயிர்களுக்கு அஞ்ஞானத்தைப் போக்கவல்ல காட்சியாய் விளங்கிக்கொண்டிருக்கிறது. இவ்வுண்மையை அநுபூதிபெற்ற சிவஞானச் செல்வர்களும் ஆங்காங்கே மக்களுக்குத் தாம் அருளிச்செய்த நூல்கள்வாயிலாக உணர்த்தியிருக்கிறார்கள். தாயுமானாரும்,

"கல்லாலின் நீழல்தனில் ஒருநால் வர்க்குக்
கடவுள்நீ உணர்த்துவதுங் கைகாட் டென்றால்
சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபேயன்றே"

"பார்த்தனவெல் லாமழியும் அதனாற் சுட்டிப்
பாராதே பார்த்திருக்கப் பரமே மோன
மூர்த்திவடி வாயுணர்த்துங் கைகாட் டுண்மை
முற்றியென தல்லல்வினை முடிவ தென்றே"

"மனதேகல் லாலெனக் கன்றே—தெய்வ
மௌன குருவாகி வந்து கைகாட்டி
எனதாம் பணியற மாற்றி—அவன்
இன்னருள் வெள்ளத் திருத்திவைத் தாண்டி."

எனக்கூறிய திருவாக்குக்களை யுன்னி மகிழ்வோமாக.

கொற்று அட்டி ஆளார்

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

தேவாரப் பாசுரங்கட்குத் திருத்தமான பாடமும் உரையும் காண முயல்வதாகிய மிகச் சிறந்த தொண்டினை யாற்றுமிடத்து முற்காலத்துள்ள சொல் வழக்காறுகளை அறியக்கூடாமையாற் பலர் இடர்ப்பட்டுப் பொருந்தாத பாடமுஞ் சிறவாத உரையும் கொள்வதுண்டு. அவ்வாறு கொள்ளப்பெற்றனவற்றுள் ஒன்று, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்காகிய,

"திங்கள்தங்கு சடையின் மேலோர் திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை தேவியார் கோற்றட்டியாளார்
உங்க ளுக்காட் செய்ய மாட்டோம் ஓணகாந்தன் தளியு ளீரே"

என்னும் அழகிய நிந்தாஸ்துதி. இப்பாட்டில் கொற்றட்டியாளார் என்பதன் உண்மைப் பொருள் இன்னதென்பதைக் காணமாட்டாது இடர்ப்பட்ட பதிப்பாசிரியர்கள் அனைவரும் ஒரு துணிவான காரியம் செய்தனர். ஓலைப்பிரதிகளில் கொற்று என்பதற்கும் கோற்று என்பதற்கும் வித்தியாசம் தெரியாது. "ே" என்ற நெடிலுக்குரிய கொம்பு ஓலைப் பிரதிகளிலில்லை. எனவே கொற்று என்றே ஓலைப்பிரதிகளிற் காணப்படுவதைக் கோற்றெனக் கொண்டு பாடமமைத்துக் கோற்றட்டியாளார் என்பதைக் கோல்தட்டி ஆளார் என்று பதப்பிரிவினை செய்து, வீணையைக் கோலால் (ஜலதரங்கம் வாசிப்பதுபோல்) தட்டி அல்லது வீணைக்கோலைத் தட்டி அதாவது அம்மையார் வீணை வாசித்துக் கவனத்தை யதிற் செலுத்துவதால் தம்மை யாளமாட்டார் என்று சுந்

தாரமூர்த்தி சுவாமிகள் கூறுவதாக மேற்கூறிய பதிப்பாசிரியர்கள் கொள்ளுகின்றனர். கோல்தட்டல் கோலாட்டம் எனவும் வளையலை ஒலித்தல் எனவுங் கொள்வாருமுளர்.

இசைக்கண் கொண்டு பார்க்குமிடத்துக் கொற்றட்டி என்பதே பொருத்தமென்றும் கோற்றட்டி என்பது பொருந்தாதென்றும் புலனாகும். பொருத்தமான "கொற்றட்டியாளார்," என்ற தொடருக்குப் பொருளும் சிறந்ததாகக் காணப்படுகிறது. இப்பொருள் யாதென்பதை முதற்கண் ஆராய்வாம்.

திருவண்ணாமலையில் அருணசலேசுவரர் கோயிற் கல்வெட்டொன்றில் (South Indian Inscriptions Vol. VIII No. 68) "கார்த்திகைத் திருநாளிலும் பங்குனித் திருநாளிலும் திருவண்ணாமலையுடையாரைச் சேவிக்க வந்த சிவயோகிகள் உள்ளிட்ட அடியாரை ஊட்டுக என்றும் புறத்தடியார்க்குக் கொற்றட்டுக என்றும் இத்தேவர் தேவதானம்" என்ற தொடர் காணப்படுகிறது. சிதம்பரம் கல்வெட்டொன்றில் (S. I. I. VIII - 55) "ஐவர்க்கு கொற்றுக்கு நாள் ஒன்றுக்கு பேர் ஒன்றுக்கு முக்குறுணியாக நெல்கலனே முக்குறுணியும்," என்றும், திருவலஞ்சுழிக் கல்வெட்டொன்றில் (Ibid-231) "திருநந்தவனக்குடிகள் பெறுங் கொற்றுக்கு," என்றும், திருவாரூர் கல்வெட்டொன்றில் மூன்றிடத்தில் (Ibid VII - 485) "கைக்கொற்று பெறுவார்க்கு" என்றும் காணப்படுகின்றன. இவற்றிலிருந்தும், வேறு பற்பல கல்வெட்டுக்களில் கொற்று என்றசொல் வருமிடங்களிலிருந்தும், இச்சொல்லின் பொருள் உணவு என்பதை ஐயந்திரிபறச் செவ்வையாகக் கூறலாம். எனவே கொற்றட்டியாளார் என்பதின் பொருள் "உணவு கொடுத்து ஆளமாட்டார்" எனத்தோன்றுகிறது. பேச்சு வழக்கிலும் கொற்று என்ற சொல் கொத்து எனத்திரிந்து சாப்பாடு என்ற பொருளில் வழங்கப்படுகிறது.

"தேவியார் அடியேற்கு உணவையளித்து அடியேனை ஆளமாட்டார்" எனக்கொள்வது இப்பாட்டின் பின்வரும் பாட்டுக்களின் கருத்துக்கும் பொருந்தியிருக்கிறது.

"அற்றபோழ்தும் அலந்த போழ்தும் ஆபற்காலத்தடி கேள்உம்மை ஒற்றிவைத்திங் குண்ணலாமோ"

என்றும்,

"வல்லதெல்லாம் சொல்லி யும்மை வாழ்த்தினாலும்வாய் திறந்தொன் றில்லையென்னீர் உண்டுமென்னீர்"

என்றும் வருவனவும் உணவுவேண்டி நிற்பதையே வற்புறுத்துகின்றன. வீணைவாசித்தல் என்பதைவிட உணவளித்தல் எனப் பொருள் கூறுவது சாலச்சிறந்ததெனத் தோன்றுகிறது. இச்சிறு ஆராய்ச்சியைப் பேரறிஞர்கள் திருவடிகட்குச் சமர்ப்பிக்கின்றேன், காய்தல் உவத்தலின்றி அன்னார் நன்காய்ந்து உண்மையை வெளிப்படுத்த வேண்டுகிறேன்.

வீணைவாசிப்பதால் ஆளமாட்டார் என்பதைவிட உணவளித்து ஆளமாட்டார் என்பது நிந்தாஸ்துதிக்கும் கூர்மை (Pungency of Sarcasm) தருகிறது. தேவியார் வீணைகானம் செய்யும்போது சுந்தரமூர்த்தி சுவாமிகளையுள்ளிட்ட ஜீவகோடிகளெல்லாம் பசிதாகத்தை மறந்திருத்தலே முறைமையாகும்: ஆனாய நாயனார் குழலின் ஆற்றலைச் சேக்கிழார் கூறுவதை மறத்தலாகாது. தேவியார் வீணைகானம் செய்தே உலகனைத்தினையும் ஆளக்கூடும். பசியென்று வந்தவர் முகம் பார்த்துக் கொற்று அட்டி ஆளமாட்டார் என்று கூறுவதில் நிந்தாஸ்துதி அழகு பெறுகிறது.

மேற்கூறிய பாடமும் உரையுமே பொருத்தமென்று பேரறிஞர்கள் கருதினால் அன்னார் செய்தற்குரிய தொன்றுண்டு. இவ்வாராய்ச்சியை யெழுப்பியது மேற்கூறிய

திருவண்ணாமலைக் கல்வெட்டிற்கண்ட "கோற்றட்டுக" என்ற தொடரே. இவ்வாறே பல கல்வெட்டுக்களிற் காணப் படும் சொற்கள், பழக்க ஒழுக்கங்கள் முதலியன செம்மை யான பாடங்களையும் பொருளையும் காண்பதற்குத் துணைசெய் யும். கல்வெட்டு ஞானம் உரைகாணும் திறமைக்குப் பொன் மலர் நாற்றமுடைத்தெனெ உண்மை நறுமணத்தையளிக்கும். எனவே தேவாரத்துக்கு உரையெழுதும் பேரன்பர்கள் கல்வெட்டுக்களையும் படித்துப் பயன் பெறுமாறு கல்லாலின் கீழிருந்தும் கல்லை வில்லாக வளைத்தும் கல்நாருரித்தும் திருவிளையாடல் புரிந்து கல்லிலும் செம்பிலும் வீற்றிருக்கும் கண்ணுதற் கடவுள் அருள் புரிவாராக.

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய

திருமாற்பேற்றுத் திருப்பதிகவுரை

[திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், போளூர்]

பண் - பழந்தக்கராகம்

1. ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயல் தென்திரு மாற்பேற்றின்
மாறி லாமணி கண்டரே.

உரை :—கரியசேறு பொருந்திய வயல்கள் நிறைந்த அழகிய திருமாற்பேறு என்னும் பதியின்கண் எழுந்தரு ளிய, உமாதேவியும், திருநீறும் சேர்ந்த திருமேனியை யுடைய பரமன், கடலிற் சுரந்து நிறைந்த விஷத்தை யுண்டு, ஒப்பில்லாத நீலமணி போன்ற கண்டத்தையுடையவராவர்.

பூவெனவாளாது கூறிய வழிச் சிறப்புடைய தாமரைப் பூ கொள்ளப்படுவதுபோல, வாளாது "சேறு சேர் வயல்" என்றதனால், வளமைக்கு உரிய கருஞ்சேறு கொள்ளப் பட்டது. "இருஞ்சேற்றகன் வயல்" (முருகு.) என ஆசிரியர் நக்கீரனார் கூறுதல் காண்க. திருமால் பரமனைப் பூசித்துச் சக்கரம்பெற்ற திருப்பதி யென்பதை உணர்த்து வதற்குத் "திருமாற்பேறு" என்றும், வயல் நலனும் திருவும் உடைய மாற்பேறு ஆதலால், "தென் திருமாற் பேறு" எனவும் விசேடித்தார்.

பொன்போலும் திருமேனியை உடைய பரமனுக்குக் கண்டம் கரிதாதல் கூடாதாகையால், அதற்குரிய காரணம் கூறுவார் நஞ்சுண்டது கூறினார். வாசுகி யென்னும் நாகத் தின் பல்லில் ஊறிப் பெருகி, பாற்கடலில் நிறைந்து பரந்து எழுந்ததனால், அதனை, "ஊறி ஆர்தரு நஞ்சு" என்றார். எதிர்ப்பட்ட பொருள் எல்லாவற்றையும் அழித்துத் திரிந்த படியால், அதனை "ஆர்தரு நஞ்சு" என்றார் என்றுமாம். அமுது வேண்டிக்கடைந்ததேவர் அஞ்ச, எழுந்து வருத்தும் நஞ்சினை, அத்தேவர் பொருட்டு உண்ட பரமனது நாகரி கத்தை உலகுணர உணர்த்துவார், "உண்டு" என்றார். "முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர்நனி நாகரிகர்" (நற். 355) என்று சான்றோர் கூறினர். நாகரிகம் கண்ணோட்டம்.

ஏனைய மணிகட்குக் குற்றம் கூறுதலும் உண்டு. அவ் வினத்தொடு பட்டமணிகள் உயர்ந்தனவாகா வாகையால், அவை உவமைக்கண் பயன்படாமல் ஒழிவது கண்டு, உயர்ந்த தன் மேற்றே உள்ளுங்காலை (தொல். பொ. 278) என்பது பற்றி உயர்வுடைய மணியென்றற்கு, மறுதலை வாய் பாட் டால் "மாறிலா மணிகண்டர்" என்றார். உண்டு என்னும் செய்தெனெச்சம், கண்டர் என்னும் குறிப்பு வினை

கொண்டது. "ஆவயிற் குறிப்பே ஆக்கமொடு வருமே" (தொல். சொல்.) என்றதனால், ஆக்கம் வருவிக்கப்பட்டது. இதனால், பரமனது பெருங் கருணைத்திறம் உணர்த்திய வாறும்.

சருவசங்கார காலத்தில் யாவும் நீறாகிய வழி, அவற்றைத் தன் திருமேனியில் அணிந்து, அவையாவும் தன்பால் ஒடுங்கி நிற்பது காட்டுதலால், "நீறு சேர் மேனியர்" என்றும், அந்நீறுதானும், ஏனையவற்றைப்போல மேனியிற் கிடந்து அழுக்கினைச் செய்யாது, மேனியைப் பொன்போல் விளங்கச் செய்தலின், "திருமேனி" என்றும் கூறினார். இவ்வாறு சங்கார காரணனாய், உலகுயிர்களைத் தன்பால் ஒடுக்கிய அவனே அவை மீளவும் தோற்றுவிக்கும் முதல்வனாகலின், அம்முதன்மைச் செயற்குரிய சத்தியையும் தன்பால் ஒடுக்கி நிற்கும் நிலையினை, "உமை சேர் மேனியர்" என்றும், இவ்வாறு ஒரு மேனியில் இருவகை வண்ணம் தோன்றிற்றாயினும், அது, கண்டார் விரும்பும் தன்மைத்தாய் எல்லாவற்றையும் தன்னை இன்றியமையாவாறு செய்யும் வீறுடையதாகலின், "திருமேனியர்" என்றும் குறித்தருளினார்.

2\. தொடையார் மாமலர் கொண்டிரு போதும்மை
அடைவா ராமடி கள்ளென
மடையார் நீர்மல்கு மன்னிய மாற்பே
றுடையீரே உமை உள்கியே

உரை :—மடைகளால் நிறையும் நீர் நிரம்பி நிலைபெற்ற திருமாற் பேற்றினை இடமாக உடைய பரமனே, உம்மையே நினைந்து மாலைக்குரிய அழகியமலர்களைக்கொண்டு அடிகள் என்று பரவி, உமக்கு அடியராயினார் பலரும் காலை மாலையாகிய இருபோதும் வந்து அடைவர்.

முன்னர்ச் சேறு சேர்வயல் கூறினாராகலின், அஃது இடையறாது இருத்தற்குரிய நீர்வளம் கூறுவார் இப்பாசுரத்தில், " மடையார் நீர் " கூறினார். அவ்வவ்வயலின் அளவும் பக்குவமும் அறிந்து பாய்ச்சவேண்டி நிரப்பப்பட்டிருப்பது தோன்ற, " மடையார் நீர் மல்கும் " என்றார். எனவே, மாற்பேறு போந்து பரவுவாருடைய வேட்கையளவும் பக்குவமும் நோக்கிப் பரமன் திருவருள் பயன் பாலிக்கும் என்று குறித்தவாறாயிற்று. திருமால் போந்து பரவிப் பேறு பெறுதற்கு முன்னரே, இத்திருப்பதி சீர்த்து விளங்கினமை தோன்ற, " மன்னிய மாற்பேறு " என்கின்றார்.

உலகிலுள்ள ஆன்மாக்கள் பரமனுக்கு அடிமையாகவும், ஏனையயாவும் உடைமையாகவும் இருத்தலால், அடிமைகள் அவன் ஆணை வழி நின்றன்றி அவற்றை நுகர்வது கூடாமை தோன்ற " உடையீரே " என்றார். திருமால் பெற்ற பேற்றினைப் பரமன் உடையனாகாதவழி, அவன் அதனைப் பெறுமாறும், இப்பெயர் இப்பதிக்கு எய்துமாறும் இல்லையாமாகலின் " திருமாற்பேறு உடையீரே " என்றார் என்றுமொரு நயம் காண்க.

உள்கியே என்ற ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. மனத்தால் உள்குதலன்றிச் செய்வன யாவும் ஆரவார நீர்மையவாகலின், அதனை விலக்கி, அடியாராயினார் தம் சிந்தையைத் தனுகரணாதிகளில் பிரித்து அவன் பாலே செலுத்தி வருகின்றனர் என்பதைக் குறித்து, "உமையே உள்கி " என்றார்.

பூக்களைப் பறித்து வறிதே சிந்திப் பரவுதலினும், மாலையாகத் தொடுத்தணிந்து பரவுமிடத்து, தம் அகக்கண்ணும் புறக்கண்ணும் பரமன் திருவுருவில் தோய்ந்து பரபோகம் நுகருமாகையால், " தொடையார் மாமலர் கொண்டு " என்று கூறினார். " சுரும்பார்மலர் இண்டைக்

கட்டி வழிபாடு செய்யும் இடம்'' என்று மீண்டும் கூறினர். இருபோது என்ற விடத்தில் முற்றும்மை தொக்கது. ''காலையொடு துந்துபிகள் சங்கு குழல் யாழ் முழவு காமருவு சீர்மாலை வழிபாடு செய்து மாதவர்களேத்தி மகிழ் மாகறலுளான்'' என்பதனால் காலையும் மாலையும் அடியார் வழிபடுமாறு காண்க. பள்ளத்தையடையும் வெள்ளம் போல அவர்தம் உள்ளமும் உரையும் உடலும் அவனைச் சென்று சேரும் சீர்மைதோன்ற, '' அடைவார் '' என்றார். ஆம் - அசைநிலை.

அடியார் தம் உள்ளம் அவனை நினைந்துவர, உடல் தொடையார் மாமலர் சுமந்துவர, அவரது உரை, '' அடிகள் அடிகள் '' என முழங்கி வந்ததென்பார், '' அடிகள் என அடைவாராம் '' என்றார். அடிகள் என்பது உயர்ந் தோரை அழைக்கும் உயர் சொல்.

இதனால், மாற்பேற்றில் உறையும் மணிகண்டரை அடியார் முன்னிலைப் படுத்தி வழிபடுமாறு கூறியவாறும்.

3. பையாரும் அரவங்கொடு ஆட்டிய
கையானென்று வணங்குவர்
மையார் நஞ்சுண்டு மாற்பேற்றிருக்கின்ற
ஐயா நின்னடியார்களே.

உரை :—கரிதாகிய நஞ்சினையுண்டு மாற்பேற்றில் எழுந்தருளியிருக்கின்ற ஐயனே, நின் அடியார்கள், ''எங்கள் பரமன், படத்தோடு கூடிய விடப்பாம்பை யேந்தி ஆட்டிய கையினை உடையவன் ', என்று பரவி வணங்குவர்.

மை, கருமை. நஞ்சுண்ட பொருள் நிறம் கருகி விடுவது பற்றி, அது '' மையார் நஞ்சு '' என உபசரிக்கப் பட்டது. நஞ்சுண்ட பொருள் நிலைபெறுதல் இல்லையாக, பரமன், அந் நஞ்சும் தானுமாக என்றும் நிலைபெற இருக்கின்ற சிறப் பைக் குறித்து, '' இருக்கின்ற மாற்பேற்று ஐயா '' என்றார்.

நஞ்சிற்குத், தன்னை உண்டார் உயிரைப் போக்கும் தன்மையைத் தரும் தலைவன் அவனே ஆகையால், ஐயா என்றார். ஐ - தலைமை.

பை - படம். அரவம் - ஈண்டு ஐந்தலை நாகம். தாருகவனத்து முனிவர்கள் பரமனைப் பகைத்து, அவரைக் கொல்ல நினைந்து யாகமொன்றைச் செய்து, ஐந்தலை நாகமொன்றைப் படைத்து, அவர்மேல் ஏவினராக, அவர் அதனைக் கையிற்பற்றி ஆட்டினர் என்பது புராண கதை. இதன் தாற்பரியம் கூறுவோர், ஐவாயரவு என்றது பொறிவாயில் ஐந்தாலும் நுகரும் ஐவகையாசையினையுடைய உயிர் என்றும், அவ்வரவினையாட்டுவதாவது பரமன் உயிர்களை அவ்வாசை வழிப்புகுத்தி ஆட்டி ஆடல் காண்பது என்றும் கூறுவர்.

முன்னைப் பாசுரத்தில், அடியார்கள் பரமனை 'அடிகள்' எனப்பரவியது முன்னிலைப் பராவல்; இங்கே கூறியது படர்க்கைப் பராவல்.

4. சாலமா மலர்கொண்டு சரண் என்று
மேலையார்கள் விரும்புவர்
மாலினர் வழிபாடுசெய் மாற்பேற்று
நீலமார் கண்ட நின்னையே

உரை :— திருமால் வழிபாடு செய்த திருமாற்பேற்றில் எழுந்தருளியுள்ள நீல நிறம் பொருந்திய கண்டனே, நின்னை, மேலோர் அனைவரும் அழகிய மலர்கள் மிகக் கொண்டுவந்து அருச்சித்து நின்னையே சரண் என்று மனத்தால் விரும்பி வணங்குவர்.

மாலினர், மாலையுடையவரெனத் திருமாலை உயர்த்தற்கண் வந்தது. குபன் என்னும் அரசன் பொருட்டுத் ததீசி முனிவரை வெல்வதொன்றையே குறிக்கோளாகக் கொண்டு அதற்குரிய சக்கரப் படையினையே பெற்ற திருமால், பெறற்

கரிய எல்லாவற்றையும் எளிதிற் பெறவருளும் முதல்வனை வழிபட்டுத் தரிசித்து, அவ்வரியவற்றைப் பெறாது, சக்கரமொன்றையே பெரிதாகப் பெற்றது தெளிவில் செயலாகலின், அது குறித்து, அவனை, "மாலினார்" என்றார். முன்னைப் பாசுரங்களில், கண்டங்கரிதாதற்குரிய ஏதுவினை விதந்து கூறினாராதலால், இதன்கண் "நீலமார்கண்ட" என்று கூறியொழிந்தார்.

ஆயிரம் பூக்களைக் கொணர்ந்து வழிபடுதற்குரியவன், ஒன்று குறையக்கொண்டு வந்து, சிறுமைப்பட்டுப் பின் தன் கண்ணிடந்து குறை நீங்கியவாறு போலாது, பல்லாயிர மலர்களைக் கொணர்ந்து வழிபடுகின்றனர் என்பார், "சால மாமலர் கொண்டு" என்றார். மேலும், அம்மால் கொணர்ந்த மலர், அவன் முகக்கண் நிகர்ப்பனவாக, இம்மேலையார் கொணர்ந்தவை நிகரற்ற நன்மலர் என்பார், "மாமலர்" என்று விசேடித்தார்.

திருமால் வேண்டிய சக்கரப்படை, அவன் கருதிய பொருளை முடித்தேமெனத் தருக்குதற்குரிய பொய்யின்பம் பயக்கும் சிறுமையுடையதாக, இம்மேலையார், சிந்திப் பரியனவும், சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவனவும் ஆகிய திருவடிப் புகலினை நினைந்து வேண்டுகின்றனர் என்றற்கு, "சரண் என்று விரும்புவர்" என்றார்.

ஏனை ஆன்மாக்களை நோக்க, இவர் ஞான வொழுக்கங்களால் உயர்ந்து, அப்பரமனது திருவடிப் பெருநிலையே நோக்கி நிற்பவர் ஆகையால், அந்நிலையினும் மேலானது பிறிதின்மை நோக்கி, அவர்களை "மேலையார்கள்" என்றார். மேலையார் என்றதனால், அவர் இவ்வுலகினராயினும், அவர் சிவபோகப் பெருநிலைக்கே உரியர் என்பதும், அவர் ஈண்டுறைவது, அவர் நெறியினை மேற்கொண்டு ஏனையோரும் செல்வது குறித்ததென்பதும் பெறப்படும். ஏனெனில், உல

இயல் மேலையோர் வழியையே பின்பற்றுவது. "வழக்கெனப்படுவது உயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சியவர்கட்டாகலான்" (பொ. 647) என்பது தொல்காப்பியம்.

மலர்கொண்டு என்பது காயத்தின் தொழிலும், விரும்புவர் என்பது மனத்தின் தொழிலும் காட்டுதலால், வாக்கின் தொழில் உய்த்துணரப்படும். அஃதாவது நிற்றல், கிடத்தல், இயங்கல் முதலிய தொழில் நிகழும் போதும் அவர் வாக்கில் பரமனுடைய திருநாமமே ஓதப்படும் என்பது.

இதனால், நீலகண்டப் பெருமானை மேலோர் வணங்குமாறு கூறியவாறாயிற்று.

5. மாறிலாமணியே யென்று வானவர்
ஏறவே மிக ஏத்துவர்,
கூறனே குலவுந்திருமாற் பேற்றின்
நீறனே என்று நின்னையே.

உரை :—பல நலங்களாலும் விளங்குகின்ற திருமாற்பேற்றின்கண் எழுந்தருளிய திருநீற்றையுடைய பரமனே, உமாதேவியைப் பங்கிலேயுடையவனே, எக்காலத்தும் நின்னையே வானவர்கள் எவ்வாற்றாலும் மாறு இல்லாத மாணிக்க மணியே என்று மிகவும் புகழ்ந்து துதிப்பார்கள்.

பல நலங்களாலும் என்பது எஞ்சி நின்றது. திருமகள் விரும்பியுறையும் திருமார்பினையுடைய திருமால் நயந்து ஏத்தும் பெரும்பதியாகலின், இதன்பால் நலங்கள் யாவும் குலவியிருத்தல் இயல்பாதலால், வாளா, "குலவும் திருமாற்பேறு" என்றார். இனி, திருகுலவும் மாற்பேறு என்று கொண்டு, திருவிற்கு, அவாய் நிலையாற் கொணர்ந்த பொருளைப்பெய்துரைப்பினும் அமையும். திருமாற்பேற்றில் எழுந்தருளிய பரமனை முதற் பாசுரத்தில் உமையும், நீறும் சேர்ந்த திருமேனியன் எனத் தொகுத்துக் கூறினாராகலின்

அம்முறையே உமையமர்ந்து விளங்கும் ஒருமை நிலையைக் "கூறனே" என்றும், நீறுபூசிய நிலையை "நீறனே" என்றும் விரித்துக் கூறினர். மாறுபட்ட மணிவகை பல இருத்தலால், அவற்றினை நீக்கி உயர்த்துக் கூறும் கருத்தின ராகலின், "மாறிலாமணி" என்று கூறினார். புறத்தே கிடந்து அழகுறுத்தும் ஏனைமணிபோலாது அகத்தில் அமர்ந்து ஞானவொளி பரப்பிப் பேரழகு நிகழ்வித்தலின் "மணி" என்றார்.

வானவர், தம் வாழ்வு இடையறாத இன்பம் உடைய தன்றாதலையுணர்ந்து அவ்வாறு இடையறா வின்பப் பேறு குறித்து இவனை வணங்குகின்றமை தோன்ற, "ஏறவே" என்பதனோடமையாது "மிக ஏத்துவர்" என்றார். ஏனை மக்களினும் அவர் அறிவும் வாழ்நாளும் மிகவுடையராதலின் அவர்க்கு ஏறவே மிக ஏத்துதல் இயலுவதாயிற்று.

6. உரையாதாரில்லை ஒன்றும் நின் தன்மையைப்
பரவாதாரில்லை நாள்களும் ;
திரையார் பாலியின் தென்கரை மாற்பேற்(று)
அரையானே அருள் நல்கிடே.

உரை:—அலைபொருந்திய நீரினையுடைய பாலியாற்றின் தென்கரையில் உள்ள திருமாற்பேற்றின்கண் எழுந்தருளிய அரசனே, நின் தன்மையறிந்து சிறிதேனும் உரையாதவரும் நின்னை நாடோறும் துதிக்காதவரும் இலர் ; ஆகலின், நீ நின் திருவருளைச் செய்தருள்வாயாக.

இத்திருப்பதி, இதுபோது பாலியாற்றின் வடக்கே நெடுந்தொலைவில் இருக்கின்றதாயினும், ஒரு காலத்தில், அவ்யாறு இவ்வூர் வழியே சென்றதாமெனப் பெரியோர் கூறுப. பாலியாற்றின் ஒரு பிரிவே இவ்வூர் வழியே இது போது செல்லும் சிற்றாறு ஆதலால், இதனையும் பாலி

யென்றார் என்று கொள்ளினும் அமையும். " திரையார் பாலி " யென்றதனால், நீர் இடையறா திருத்தல் பெறாம்.

வேண்டுவார் வேண்டுவது வழங்கும் கொடைவள்ளல் இருக்கும் பதியாகையால், அவனது வள்ளன்மை கூறி அழைப்பதுபோல, திரைவீசுவதால், " திரையார் பாலி " என்றும், அதுகண்டு தெரிந்து வருவார்க்கு, அவன் மிக்க அணியனாய் உள்ளான் என்றற்கு, " தென் திருமாற் பேறு " என்றும், கூறி, வழங்குதற் குரிய அருட்செல்வம் உடையன் என்பதை " அரையன் " என்பதனால் எய்துவித்தார். அக் குறிப்பால் வரும் அடியார்கட்கு வழங்க வேண்டுவதனை விரைய வழங்குக என்பார், " அருள் நல்கிடு " என்றார்.

வாக்கு மனங்கடந்த பரம்பொருளாயினும், நின் திருவருளாலே நின்னை வணங்குவார்க்கு, நின் திருவடி ஞானம் தலைக்கூடி நின்தன்மையை உணர்த்துவதால், இங்குள்ளார் யாவரும் அதனை அறிந்துளார் என்றற்கு, 'நின்தன்மையை' என்றும், " உணர்ச்சிவாயில் உணர்வோர் வலித்தே " (தொல். சொல். 393) என்றதனால், இவர் பலரும் தம் உணர்வுவன்மைக் கேற்றவாறு அறிந்திருத்தலின், அது நின்தன்மையை நோக்க மிகச்சிறிதாயினும், அதனை ஒழிந்திலர் என்றற்கு, " ஒன்றும் " என்றும், அதனை உரைக்குந் தோறும், அவருள்ளத்துச் சிவானந்தம் ஊற்றெழுந்து என்புருக இனித்தலின், மேன்மேலும் விடாது பரவுகின்றனர் என்பார், " உரையாதாரில்லை " என்றும், " பரவாதாரில்லை " என்றும் கூறினார். இனி, இவ் வின்பந்தானும் ஏனைய இன்பங்கள் மிகத்துய்த்தவழித் தெவிட்டுமாறுபோல இன்றி, நுகருந்தொறும் நுகருந்தொறும் புத்தின்பம் பயந்து மகிழ்வித்தலின், " பரவாதாரில்லை நாள்களும் " என்றார். " உணர்ந்தார்க் குணர்வரியோன் தில்லைச் சிற்றம் பலத் தொருத்தன், குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்

செவ்வாயிக் கொடியிடை தோள், புணர்ந்தாற் புணருந் தொறும் பெரும் போகம் பின்னும் புதிதாய், மணந் தாழ்புரி குழலா ளல்குல்போல வளர்கின்றதே '' என்பதனாலும் இவ்வுண்மை துணியப்படும்.

இதனால், அடியார் முதல், வானவர் ஈறாக நின்றார் ஒழிய ஏனையமக்களும் பிறவுயிரும் பரமன் தன்மையை யுரைத்தும் பரவியும் ஒழுகுமாறு கூறியவாறு.

7. இத்திருப்பாசுரம் கிடைத்திலது

8. அரசளிக்கும் அரக்கன் அவன்தனை
உரைகெடுத்தவன் ஒல்கிட
வரமிகுத்த எம்மாற்பேற்றடிகளைப்
பரவிடக் கெடும் பாவமே.

உரை :—அரசுபுரிந்து தன் கீழ்வாழ்வாரை அளிக்கும் அரக்கனாகிய இராவணனைக் கைலைமலைக்கீழ் அகப்படுத்து, அவன் செருக்குற்றுத் திரிந்ததற்கு ஏதுவாயிருந்த பொய்ப் புகழ் வேட்கையைக் கெடுத்ததனால், அவன் அச்செருக்க கன்று உளம் கனிந்து பாடிப்பரவ, அவனுக்கு வரங்கள் பல தந்து மேம்படுவித்த, திருமாற் பேற்றில் எழுந்தருளியிருக் கின்ற, எங்கள் அடிகளை வணங்கிப் பரவியவழி, பரவுவார் பாவம் முற்றவும் கெடும்.

அரசனாகியவழி, வேண்டுவாரை அமுதாய் அளித்தலும், வேண்டாதாரை நஞ்சமாய் வருத்தலும் அரசு முறையாகலின், அதனை மேற்கொண்டு உலகுபுரந்த இராவணனை, '' அரசளிக்கும் '' என்றார். அவனை அவன் பெயராற் கூறாது, '' அரக்கன் '' எனப் பொதுப்படக் கூறினமை யின், ஏனை அரக்கரைப் போலச் செருக்கும், சினமும், சிறு தொழிலும் செய்வது ஒழிந்திலன் எனத்தாம் கருதியஇழிவு குறித்தவாறு. '' உரை கெடுத்து '' என்றதனால் ஏற்புடைய

சொற்கள் வருவிக்கப் பட்டன. உரை, புகழ். அரக்கன் அவன் என்பது சாத்தனவன் என்றாற்போல நின்றது. இனி, அரக்கனாயினும், அவனுக்கிளைய வீடணன் போலத் தருமம் நினையாது, பரமன் இருந்த மலையை எடுத்தெறிவன் எனத்துணிந்த தீச்செயல் கருதி அருவருத்து "அவன்" என்றார் என்றுமாம். காரணம் காரியமாக உபசரிக்கப் பட்டது. குற்ற முடையனாயினும் அதனையுணர்ந்து, மனம் கனிந்து உருகின இராவணன்பால், பெருங் கருணைகொண்டு வரம் பலதந்து வாழ்வித்த சிறப்புத் தோன்ற, வரம் மிகுத்த எம்மாற் பேற்றடிகள்" என்றார். மிகுத்த என்னும் பிற வினை செய்வித்தற்பொருட்டு.

தீமை செய்தார்க்கும் பேரருள் சுரக்கும் பரமனை அன்பால் வணங்கி வாழ்த்துவார் பெறும்பயன் உரையில் அடங்காதாகையால், காயமனங்களோடன்றி வாக்கொன்றினால் பரவிய வழியும் அவர் பாவம் பறையும் என்றற்கு, "பரவிடக் கெடும்பாவம்" என்றார். "கெடும்" எனவே, மறுவலும் கிளைக்காவாறு வேரோடு அழிவுறும் என்பதாம். ஆகவே, திருமாற்பேற்றடிகளைத் திரிகரணங்களாலும் பரவு வார்க்குப் பிறவி கெடுதல் சொல்லாமலே பெறப்படும் என வுணர்க.

9. இருவர் தேவரும் தேடித் திரிந்தினி
ஒருவரால் அறிவொண் ணிலன்
மருவுநீள் கழல் மாற்பேற் றடிகளைப்
பரவுவார் வினை பாறுமே.

உரை :—பண்டு, பிரம விட்டுணுக்களாகிய தேவர் இருவரும் முறையே முடியும் அடியும் தேடி, பறவையாயும், பன்றியாயும் முறையே உருமாறிச் சென்று திரிந்தும், அவருள் ஒருவராலும் அடிமுடி காணப்படானாகிய, அன்பரால் நினைவாரது சிந்தையைப் பொருந்தியிருக்கின்ற நீண்ட

கழலையுடைய, திருமாற்பேற்றில் எழுந்தருளியுள்ள பரமனை, இதுபோது, பாவித் துதிப்போரது வினைகெடும்.

தேவர் இருவரும் எனற்பாலது இருவர் தேவரும் என வந்தது. இருவர் என்பது வினைப்படு தொகுதியாகலின், உம்மை மாறவேண்டியதாயிற்று. "இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்" (தொல் - சொல்.) என்பது தொல்காப்பியம். திரிந்து, ஒருவரால் என்புழித் தொக்க உம்மைகள் முறையே முயற்சியருமையும், முயல்வார் சிறப்பும் உணர்த்தின.

தேடித் திரிந்ததில் என்ற பாடத்துக்கு, தேவர் இருவரும் பரமன் அடிமுடியைத் தேடித் திரிந்ததில், என்பது பொருளாயினும் அஃது ஒருவராலும் அறிவொண்ணிலன் என்பதனோடியைந்து கட்டுரைச் சுவை எய்தாமை யுணர்க. அறியுண்டிலன் என்றும், அறிவுண்டிலன் என்றும் பாடமுண்டு. அறியுண்டிலன் என்பதற்குக் கட்டுண்டிலன் என்றாற்போல அறியப்பட்டிலன் என்றும் அறியுண்டிலன் என்பதற்கு அறிவுக்ககப்பட்டிலன் என்றும் உரைக்க.

அன்பால் நினையும் ஆன்மாக்கள் பலவற்றினுடைய நெஞ்சிலும் சென்று தங்குதலால் அவன் திருவடியை, "மருவு நீள்கழல்" என்றும், கழலாவினையைக் கழற்றுவனவாகலின், திருவடியைக் "கழல்" என்றும் கூறினார். கழல் - ஆகுபெயர். பரவுவோர் கரணங்கள் கழலிற் பதிந்து செயலறுதலின், வினைபற்றுக்கோடும் செயற்பாடும் இன்றிக் கெடுவது குறித்து, "வினை பாறுமே" என்றார்.

வினையாகிய புண்ணியபாவ மிரண்டினுள், பாவக்கேடு முன் பாசுரத்திற் கூறி, எஞ்சிய புண்ணியமும் பிறவிக் கேதுவாகலின், அதன் கேட்டை இப்பாசுரத்தாற் கூறினார். பரவிடக் கெடும் பாவமே என்ற பாடம் பொருட் சிறப்பிற்

றன்று. இவ்விரண்டு பாசுரங்களாலும் மாற்பேற்றடிகளைப் பரவுவோர் பெறும் பயன் கூறியவாறாயிற்று.

10. தூசு போர்த்துழல்வார் கையில் துற்றுணும்
நீசர் தம்முரை கொள்ளேலும்;
தேசமல்கிய தென் திருமாற் பேற்றின்
ஈசனென் றெடுத் தேத்துமே.

உரை :—ஆடையால் தேகத்தை மூடித் திரியும் புத்தர்களும், கையில் உணவுண்ணும் இழிஞராகிய சமணர்களும் என்ற இப்பரசமயவாதிகளுடைய உரைகளைப் பொருளெனக் கொள்ளாதீர்கள்; புகழ்நிறைந்த அழகிய திருமாற் பேற்றின்கண் எழுந்தருளிய ஈசனே என்று எடுத்துக்கூறித் துதிப்பீர்களாக.

தூசு, ஆடை, துற்று, உணவு, நீசர், ஒழுக்கம் குறைந்தவர். கொள்ளேல் என்பது கொளெல் எனவிகாரம். உம்மை, இசை நிறை, தேசம், புகழ். இதுவடசொற் சிதைவு.

சமணர்க்கு ஆடை கிடையாதாகையால், தூசு போர்த்துழல்வார் என்றது புத்தர்களையாம். "ஆடையொழித் தங்கமணே திரிந்துண்பார்" (திருநஞ) எனப்பிறாண்டு,சுவாமிகள் கூறுமாறு காண்க. "சமணர் சுவேதாம்பரர் திகம்பரர் என இருவகைப்படுவர். தென்னாட்டில், சம்பந்தர் காலத்தில் மிக்குத் திரிந்தோர் திகம்பர முனிவரே. ஆடையின்றித் திக்கையே அம்பரமாக (ஆடையாக) உடுத்திருந்தனராதலின் 'அவரை வெற்றரையுழல்வர்' எனப் பலவிடத்தும் குறித்துச் சொற்றனர் அப்பரும் சம்பந்தரும்; "சுவேதாம்பர முனிவர் வெள்ளாடையுடுப்பவர்," என்று சைவத்திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் கூறுகின்றார்கள். ஆகையால் இங்கே குறித்த தூசு போர்த்துழல்வார் என்பது புத்த பிக்ஷுக்களையும், சமண சுவேதாம்பரிகளையும் குறிக்கு

மாயினும், "கையாலுண்டுழல்வாரும் கமழ்துவராடையி னுற்றம், மெய் போர்த்துழல்வாரும்" என்றும், "துவருறு விரிதுவராடையர் வேடமில் சமணரென்றும், அவருறு சிறு சொலை அவமெனநினையும்" என்றும் பிள்ளையார் பிறுண்டும் புத்தர்களையே உரைத்தலால், புத்தர்களையே கொள்க.

புத்தரும் சமணரும் கூறுவனவற்றைக் கொள்ள வேண்டாவெனக் கூறியவர், இனி மக்களாற் கொண்டு கூறக் கடவது கூறுவார், "திருமாற் பேற்றீசன் என்று எடுத்தேத் துமே" என்கின்றார்.

புத்தரும் சமணரும் பலநாடுகட்குச் சென்று தம் சமயக் கருத்துக்களையும், ஒழுக்கங்களையும் தெரிவித்துப் புகழ் பரப்பி வருவதுகண்டு, மக்கள் மயங்கி அவர் கூறுவன வற்றைக் கொள்ளாவாறு, நிலவுலகு முழுதும் பரவிய புகழ் உடைமை கூறித்தெளிவிப்பார், "தேசமல்கு தென் திருமாற் பேறு" என்றார்.

"எடுத்தேத்துமே" என்றார், பரசமயவாதிகள் வாயடங் கித் தமது நெறியும் ஒழுக்கமும் இவற்பாற் செல்லா எனக் கருதி நீங்குவர் என்றற்கு. ஏத்தும் என்பது உம்மீற்று முன்னிலைப் பன்மை யேவல்வினை முற்று.

11. மன்னிமாலொடு சோமன் பணிசெயும்
மன்னுமாற் பேற்றடிகளை
மன்னு காழியுள் ஞானசம்பந் தன்சொல்
பன்னவே வினை பாறுமே.

உரை :—பெருமையினையுடைய திருமாலோடு சந்தி ரன் தொண்டுபுரியும் நிலைபெற்ற திருமாற்பேற்றில் எழுந் தருளியுள்ள பரமனை நிலைத்த சீகாழிப் பதியிற் பிறந்த ஞானசம்பந்தன் பரவிச் சொல்லிய திருப்பாசுரங்களைச் சொல்லியவளவே, சொல்லுவார் வினை தொடர்பறும்.

மன், பெருமை; இகரம் பகுதிப்பொருள் விகுதி. பணி செயுமாற்றால், மாலும் சோமனும் ஒப்பாராயினும், தவத்தால் மாலோன் உயர்ந்தவனாகலின், "மாலொடு" என்பதில் ஒடு உயர்பின் வழித்து. தக்கனது சாபமேற்ற சந்திரன் அதனின் உய்தி பெறுமாறு இங்கே பூசித்தான் என்று கூறுவர்.

உலகனைத்தும் மூழ்குமாறு பெருகிய பிரளய வெள்ளத்தில், அழிவின்றி உயர்ந்த திருப்பதியாகலின் "மன்னுகாழி" என்றார். "துயரிலங்கும் உலகிற் பலவூழிகள் தோன்றும் பொழுதெல்லாம், பெயரிலங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான்" என்று பிறாண்டும் கூறுவர். ஞானசம்பந்தன் சொல்லைப் பன்னுவார்க்கு நெஞ்சம், அச்சொற்பொருளிற் பதிந்து சிவானுபவத்தை நுகர்வதால் பசுபாசவினை யிரண்டும் நீங்குதல் குறித்து "வினைபாறும்" என்றார். எனவே பதிபுண்ணியமே நின்று நிரதிசயானந்தத்தை நிகழ்விக்கும் என்பதாம்.

இதனால், இப்பதிகத்தைப் பயில்வார்க்கு உளதாகும் பயன் கூறியவாறாயிற்று.

கணமங்கலம்

[கோவைகிழார்]

கணமங்கலம் என்ற திருப்பதி சோழநாட்டைச் சேர்ந்தது. அது மிகவும் செழிப்பு வாய்ந்தது. அதனைப்பற்றிக் கூறுகையில் சேக்கிழார் நாயனார்,

வரும்பு னற்பொன்னி நாட்டொரு வாழ்பதி
சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட

விரும்பு மென்கண் உடையவாய் விட்டுநீள்
கரும்பு தேன்பொழியும் கண மங்கலம்

என்கிறார். ஆகவே இத்திருப்பதியைச் சுற்றியுள்ள வயல்களில் கரும்பு நன்றாக விளைந்தது என அறிவோம். கரும்பு மட்டுமேயன்றி செந்நெலும் அதிகமாக விளைந்தது என்று,

செந்நெல் ஆர்வயல் கட்டசெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தம் சொரிந்திட
துன்னு மன்னர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுவார்.

இவ்வாறு சிறந்த வளப்பம் கொண்ட ஊர்தான் அரிவாள் தாயநாயனார் அவதரித்த ஊராகும். அதனை ஆசிரியர்,

அக்கு லப்பதி தன்னில் அறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்
தொக்க மாநிதித் தொன்மையில் ஓங்கிய
மிக்க செல்வத்து வேளாண் தலைமையார்.

தாயனார் எனும் நாமம் தரித்துளார்.

என்று கூறுகிறார். மிக்க செல்வம் பொருந்திய வேளாளர் குலத்தில் தோன்றிய தாயனார் அவதரித்த இத்திருப்பதி தஞ்சைக்குச் சேர்ந்த திருத்துறைப்பூண்டிக்கு வடக்கே 2½ கல் தூரத்தில் உள்ள தண்டலைச் சேரி என்ற ஊருக்கு ½ கல் அளவில் இருந்த ஒரு ஊர் என்பர். இப்போதும் இங்கே கணமங்கலத் திடல் என்று ஒரு திடல் இருப்பதாகக் கூறுவர். ஊர் அழிந்துவிட்டதாகத் தெரிகிறது. தண்டலைச் சேரி என்று இப்போது வழங்கும் ஊர் முற்காலத்தில் தண்டலை நீணெறி என்று பெயர் பெற்றிருந்தது. அது ஒரு பாடல் பெற்ற தலம். மேலும் அது ஒரு மாடக்கோயில். கோச்செங்கட் சோழனாயனாரால் கட்டப்பெற்றது. அதனை,

கருவ ருந்தியி னின்முகன் கண்ணனென்
றருவ ருந்தெரி யாவொரு வன்னிடம்

செருவ ருந்திய செம்பியன் கோச்செங்கண்
நிருபர் தண்டலை நீணெறி காண்மினே.

என்ற பாசுரத்தால் அறியலாம். இவ்வூர்ச் சிவாலயம் மிகப் பண்டைப் பார்வை கொண்டது. விஷ்ணு கூர்மாவதாரம் எடுத்தகாலத்தில் அவ்வவதாரச் செயல் முடிந்ததும் வெற்றியினால் அகங்கரித்து நின்று கடலைக் கலக்கவும் சிவபெருமான் அக்கூர்மத்தின் அகங்காரத்தை அடக்கி அதன் ஓட்டினை அணிந்தருளிய திருவிளையாடல் நிகழ்ந்த இடம் இதுவாகும். சுவாமியின் பெயர் நீணெறிநாதர்; அம்மையார் - ஞானம்பிகை. தல விருக்ஷம் - குருந்தம். இது பெரிய மரம்; இலைகளில் ஒரே இதழ் உள்ளது. இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் பதிகம் ஒன்றுண்டு. அதன் முதற் பாடல்,

விரும்பும் திங்களும் கங்கையும் விம்மவே
சுரும்பும் தும்பியும் சூழ்சடை யார்க்கிடக்
கரும்பும் செந்நெலும் காய்கமு கின்வளம்
நெருங்குந் தண்டலை நீணெறி காண்மினே.

என்ற தேவாரத்தில் உள்ள சொற்களை அப்படியே எடுத்துச் சேக்கிழார் தாம் அருளிய அரிவாட்டாயனார் புராணத்தில் அடுக்கிக்கொண்டார் போலும். விரும்பு, சுரும்பு, கரும்பு, செந்நெல் இவைகளை அடுக்கியுள்ள முறையைக் காண்க. மேலும், இவ்விரு ஊர்களும் அரைக்கல் அளவில் இருந்ததால் சுற்றிலுமுள்ள வயல்களில் ஒரேவித விளைவு இருக்கும் அல்லவா? ஆகவே, கரும்பும் செந்நெலும் விளைந்தன இரு கவிஞர்களும் வருணித்தது ஒத்ததேயாகும். கணமங்கலம் தண்டலை நீண் நெறியின் ஒரு பாகமாகவும் அக்காலத்தில் இருந்திருக்கலாம். அரிவாட்டாய நாயனாரும் வழிபட்டு வந்தது தண்டலை நீணெறிக் கோயிலில் எழுந்தருளியிருந்த சிவபிரானே என்றும், அவர் முத்தியடைந்த

தும் அத்தலமே என்றும் வ. த. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதியிருக்கின்றார்கள்.

கணமங்கலத்தே அவதரித்த தாயனார் அவ்வூரிலே பெரும்பான்மையாக விளைந்த செந்நெல்லைச் சிவபிரானுக்கு உகந்தது எனக்கொண்டு திருவமுது செய்விப்பார். அச்செந்நெல்லோடு செங்கீரையும் மாவடுவும் கொண்டு திருவமுது செய்விப்பார். செந்நெல்லும் செங்கீரையும் சிவபிரான் திருமேனிக்கு ஒத்தது எனக்கொண்டும் அவைகளைத் திருவமுதுக்கு ஏற்றுக்கொண்டிருக்கலாம். அவ்விதத் திருத்தொண்டு தவறாமல் செய்துகொண்டிருக்கையில் திருவருளால் அவருடைய செல்வம் யானையுண்ட விளங்கனிபோல் மாய்ந்தது. செல்வம் மாய்ந்தும் திருத்தொண்டு வழுவவில்லை. தாயனார் கூலிக்கு நெல் அறுத்து அதில் கிடைக்கும் நெற்கூலியைச் செந்நெல்லாகப் பெற்று அதனை ஆண்டவனுக்கு அமுது செய்விப்பார். கார்நெல் கூலியாகப் பெற்றால் அதைமட்டும் தான் உண்பார். இவ்வழியில்தான் இருந்துவர ஒருகாலம் வயல்கள் எல்லாம் செந்நெல்லாகவே திகழ்ந்தது. அன்பிற் சிறந்த நம்பெரியார் 'இது யான்செய்த புண்ணியம்' என்று மகிழ்ந்து செந்நெல்லையெல்லாம் ஆண்டவனுக்கே படைத்துத் தான் பட்டினி கிடந்தார். பிறகு இலைக்கறியை உண்டு அதுவும் அற்றுப்போக நீரை அருந்தித் தொண்டு புரிந்தார். ஒரு நாள் செந்நெல், செங்கீரை, மாவடு இவைகளைக் கூடையில் ஏந்தி ஆலயத்திற்குச் செல்லுகையில் பட்டினியால் கால் தளர்ந்து தவறி வீழ்ந்தார். உடன்வந்த மனைவி பிடித்தும் பயனில்லை. செந்நெல் நிலவெடிப்பில் விழுந்து சிந்தின. 'இனி என்ன பயன். செந்நெல் இல்லாது சிவபிரானுக்கு எதனை ஊட்டுவேன்,' என்று பதறித் தன் அரிவாளை எடுத்துக் கழுத்தை அரியத் தொடங்கினார். உடனே கருணையங் கடவுள் அவ்வெடிப்

பின்மூலம் கையைவிட்டு அடியவரின் கையைப் பற்றினார். அப்போது மாவடு தின்னும் ஒலியான 'விடேல் விடேல்' என்ற ஒலியும் கேட்டது. உடனே இடபாரூடராக ஆண்டவன் காட்சிதர, அடியவர் ஆண்டவனைப் புகழ, அவருக்கு ஈறில்லாப் பேற்றைத் தந்தருளினார். தாயனார் அரிவாளைக் கழுத்தில் பூட்டினதினால் அரிவாள் தாயனார் எனப் பெயர் பெற்றார்.

அரிவாட்டாய நாயனாரைப்பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் நாளதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால் மற்ற சிவனடியார்களைப்போலவே இந்நாயனாருடைய பெயரையும் மக்கள் இட்டுவந்தனர் என்பதற்குச் சான்று கிடைத்திருக்கின்றது. தஞ்சை ஜில்லா கும்பகோணம் தாலுக்கா திருப்புறம்பியத்தில் உள்ள சாக்ஷீசுவர சுவாமி கோயிலில் தென்னண்டைச் சுவரில் உள்ள ஒரு கல்வெட்டில் (344/27) "அரிவாட்டாயன், திருத்தொண்டன், வன்றொண்டன், சண்டேசுவரன், இயற்பகை, கோட்புலியார், விறன்மிண்டன், அணுக்கநம்பி" என்ற பெயருடையவர்கள் திருப்புறம்பியமுடைய நாயனாருக்கு ஐப்பசி, பங்குனி திருவிழாக்களிலும், திருவேட்டை, தீர்த்தம், நாட்களிலும் நிபந்தங்களுக்காக நிலதானம் செய்ததாகக் கண்டிருக்கிறது. இக்கல்வெட்டு ஒரு அரசனுடைய 13-வது ஆண்டில் வெட்டப்பட்டது. அரசன் பெயர் தெரியவில்லை. ஆனால் இக்கல்வெட்டுக்கு மேல் பதித்திருக்கும் கல்வெட்டு பரகேசரிவர்மன் விக்கிரமசோழனுடையது. (11-வது ஆண்டு) ஆகவே 12 நூற்றாண்டுச் சோழர் காலத்துக் கல்வெட்டாக இதனை ஊகிக்கலாம், ஏறக்குறைய அக்காலத்தில் பெரிய புராணம் எழுதப்பட்டதாகையால் இச்சிவனடியார்களின் பெயர்கள் மிகவும் பிரசித்தமாக அப்போது இருந்திருக்கலாம். மக்களும் அவ்வடியார்களின் பெயர்களைத் தம் பெயர்களாக வைத்துக்கொள்ளும் வழக்கம் ஏற்பட்டிருக்கும். மேலும் தாயனார் என்ற பெயரும் அக்காலங்களில் மக்கள் சகசமாக இட்டுக்கொண்டு வந்தார்கள் என்பதற்குச் சில சாசனங்கள் ஆதாரமாயிருக்கின்றன. தாயன்கணமுடையான் (திருச்சி, திருவெறும்பூர் 744/1914),

தாயன்சிங்கன் (மதுரை, பெரியகுளத்துச் செப்புச்சாசனம் 13/1907) தாயன் திருச்சிற்றம்பலமுடையான் (திருச்செங்காட்டங்குடி 58/1913) என்னும் பெயர்கள் கிடைக்கின்றன. இவைகளில் தாயன்கணமுடையான் என்ற பெயர் குறிப்பிடத்தக்கது. கணமுடையான் என்ற சொல் கணமங்கலம் உடையான் என்பதன் சுருக்கமாக இருக்கலாம். அக்கல்வெட்டில் இராசகேசரிவர்மன் 5-ம் ஆண்டில் காவிரிக்குத் தென்பால் எழுந்தருளியுள்ள மகாதேவர்க்கு (திருவெறும்பியூர்) நந்தா விளக்கு வைப்பதற்காகத் தாயன் கணமுடையான் நிலதானம் செய்ததாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. மற்றைய விவரங்கள் தெரியவில்லை. நண்பர்கள் அறிந்தால் வெளியிடலாம்.

திருவாசகம்

[சு. முருகப்ப பிள்ளை]

திருச்சதகம் - ஆநந்தத்தழுந்தல் - 1-வது பாட்டு

புணர்ப்பதொக்க எந்தை என்னை யாண்டுபூண நோக்கினாய்
புணர்ப்பதன்றி தென்றபோது நின்னொடென்னொ டென்னிதாம்
புணர்ப்பதாக அன்றிதாக அன்புநின்க ழற்கணே
புணர்ப்பதாக அங்கணாள புங்கமான போகமே.

உரைநடை :—எந்தை! என்னை ஆண்டு புணர்ப்பது ஒக்க பூணநோக்கினாய்; இது புணர்ப்பது அன்று என்ற போது; நின்னோடு என்னோடு இது என் ஆம்? இது இது புணர்ப்பது ஆக, அன்று ஆக; அங்கணாள! அன்பு நின் கழற்கணே புணர்ப்பதாக (இதுவே எனக்கு) புங்கமான போகம்.

உரை :—எந்தை - உயிர்க்குயிராய் நின்று அறிவைப் பயப்பிக்கும் என் அப்பனே,

என்னை - நின்னைப் பிரிந்து இருவினை வயப்பட்டு உழல்கின்ற அடியேனை,

ஆண்டு - நீ அந்தண வடிவு கொண்டுவந்து குருந்த மரத்தடியில் வைத்து அன்று ஆட்கொண்டருளி,

புணர்ப்பது ஒக்க - உன் திருவடிகளில் சேர்த்துக் கொள்ளுவதுபோல,

பூணநோக்கினாய் - உனது அருட்கண்ணினால் என்னைக் குறிக்கொண்டு சட்சு தீக்கை செய்தருளினாய், (ஆயினும் பின்னர் 'நாயினேனை நலமலி தில்லையுட் கோலமார் தருபொதுவினில்வருக' என ஆக்ஞையிட்டு என்னை ஈங்கு ஒழித்தருளி நீயும் நின்னடியரும் சென்றது கருதி).

இது - இவ்வாறு செய்தமுறைமை,

புணர்ப்பது அன்று என்றபோது - அடியேனைநின் திருவடிகளிற் சேர்த்துக்கொள்ளுமாறு அன்று எனக்கொள்வேனாயின்,

நின்னொடென்னொடு இதுஎன் ஆம் - அந்நோக்கினால் உனக்கும் அடியேனுக்கும் ஏற்பட்ட இச்சம்பந்தத்தால் உண்டான பயன் யாதோ? (அறியேன்),

இது புணர்ப்பதாக அன்றாக - இஃது அத்துவிதக் கலப்பு ஆகட்டும் அல்லாமற் போகட்டும் (அக்கரையில்லை),

அங்கண் ஆள! - அழகிய நெற்றிக் கண்ணையுடைய எம்பிரானே! (அடியேன் உன்னிடம் வேண்டிக்கொள்வது ஒன்றுண்டு, அஃது யாதெனின்)

அன்பு - எனக்கு உன்னிடத்துள்ள ஆரா அன்பானது,

நின்கழற்கணே - வீரக்கழல் அணிந்த உனது திருவடிகளிலேயே,

புணர்ப்பதாக - படிந்து கிடக்குமாறு அருளிச் செய்வாயாக,

புங்கமான போகம் - (இதுவே எனக்கு) யாவற்றினும் மேலான பேரா இயற்கைப் பெருவாழ்வினை அளிக்கும் பேராநந்தப் பெரும்போகம் ஆகும்.

விளக்க உரை :—இப்பாட்டு திருச்சதகம் அ-வது பதிகமாகிய ஆநந்தத்தழுந்தல் என்ற பத்தில் முதற் பாட்டு.

அவை பத்துப் பகுதிகளாகக் கூறப்பட்டுள்ளன். அவை மெய்யுணர்தல் முதல் ஆனந்தாதீதம் ஈறாயுள்ளன. அவற்றைச் சைவ சித்தாந்த உண்மையில் தத்துவரூபம் முதல் சிவபோகம் ஈறாகக் கூறப்படும் தசகாரிய முறையில் வைத்து உணர்த்தியதாகக் கூறுவாருமுளர். அவ்வாறாயின் இப் பத்து சிவதரிசனத்தை உணர்த்தியதாகக் கொள்ள வேண்டும்.

திருச்சதகத்தின் பொதுக்கருத்து யாதெனின், சுவாமிகள் தன்னை ஆட்கொண்டளித்த ஞானகுருவின் அருளை நினைந்து அவன்பேரில் கொண்ட மோகத்தைத் தெரிவித்தலாம். மோகம், ஈண்டுப் பத்தி வைராக்கியம். ஆநந்தத்து அழுந்தலாவது, குருஉபதேசத்தால் தான்பெற்ற சிவபோகத்தை அநுபவித்தல்.

இப்பதிகத்தைப் பிரிவாற்றாமையால் படர் மெலிந்திரங்கல் என்னும் அகத்துறையில் வைத்து உணர்த்தியதாகவும் கொள்ளலாம். அஃதாவது, வரைந்து தலையளி செய்த தலைவன் தலைவியை விட்டு நீங்கிய விடத்து அப்பிரிவினை ஆற்றாமையால் தலைமகளுக்கு ஏற்படும் இடர்ப்பாடு தெரிவித்தலாம். பிரிவாற்றாமைக்கு அழுங்குவித்தல் பயன் ஆகலின், ஆநந்தத்தழுந்தல் பிரிவாற்றாமையின் பாற்பட்டதென்க.

இனி, எந்தை-என் தந்தையே. ஏ, என்னும் விளி வேற்றுமை தொக்கது. இறைவன் உயிர்களுக்கெல்லாம் உயிராய் நின்று அறிவைப் பயப்பிக்கும் அப்பன் ஆகலின், உலகுக்கு அம்மையும் அவனே, அப்பனும் அவனே. இறைவனுக்கு அம்மையப்பன் என்ற பெயரே சைவத்திற் சிறப்பாகக் கொள்ளப்படும். புணர்ப்பு - கலப்பு. அத்துவிதக் கலவி சுவாமிகள் ஆட்கொள்ளப்பட்டபோது முத்தியடையப் பெறாமையின், என்னை ஆண்டு புணர்ப்பதொக்க என்றார். ஆண்டு என்றது சுவாமிகளைக் குருந்தமரத்தடியில் வைத்து ஆட்கொண்டதாகும். நோக்குதல் - நயனதீக்கை செய்தல். அது அறுவகைத் தீக்கைகளில் சிறந்தது. அது சுவாமிகள் போன்ற தீவிரதர பக்குவிகளுக்குச் செய்யப்படுவது. விரிவு

நூல்களிற் காண்க. 2-வது 3-வது வரும் புணர்ப்பது என்ற சொற்றொடரில் அது பகுதிப் பொருள் விகுதி. சிவனவனென்றாற்போல. ஒடு இரண்டும் நான்காம் வேற்றுமை உருபுமயக்கம். இது என் ஆம் என வைத்துரைத்துக்கொள்க. இது என்றது நோக்கினால் உண்டாய தொடர்பு அல்லது சம்பந்தம். என் ஆம் எ - து என்ன பயனைத் தருமோ ? என்ற ஐயவினா. அது பற்றிய கவலையில்லை என்பார், ' இது புணர்ப்பதாக அன்றாக' எனக் கூறினாரேனும் யான் உன்னிடம் வேண்டுவது ஒன்று உளது என்பார், அன்பு நின்கழற் கணே புணர்ப்பதாக என உடன் கூறினார். அவ்வேண்டுகோள் அவாய் நிலையாற் பெறப்பட்டது. 4-வது புணர்ப்பதாக என்பது வியங்கோள் வினைமுற்று. அன்பு - அயரா அன்பு. ஏ - தேற்றேகாரம்.

இப்பாட்டில் அன்பு நின்கழற்கணே புணர்ப்பதாக என்றது உற்று நோக்கத்தக்கது. இதுவே இந்நூலின் திரண்ட பயன் என்னலாம். இறைவன் உயிர்க்குயிராய் அநந்நியமாக (அத்துவிதமாக) நின்று அறிவித்தும் அறிந்தும் வரும் பேருபகாரத்தை மறவாது கடைப்பிடித்து அருள் வழிப்பட்டு அவன் திருவடிகளில் பத்தி செய்தலே ஈண்டு அயரா அன்பு என்க. இவ்வாற்றினையே சிவஞானபோதம், ௧௧-வது சூத்திரம் "(இறைவன்) காண உளத்தைக் கண்டு காட்டலின் அயரா அன்பின் அரன்கழல் செலுமே" என அந்நூற்பயனை முடிவில் வைத்தமை கண்டு தெளிக. அஃது ஒன்றே வேண்டும் என்பார் 'அன்பு நின்கழற்கணே புணர்ப்பதாக' எனத் தேற்றேகாரத்தால் உணர்த்தினார். அங்கண் - அழகிய நெற்றிக்கண், ஆள - உடையவனே. அ-விளிஉருபு. அது ஞானக்கண். அது சிவபெருமானுக்கே உரியதாகலின், முக்கட்பகவன் என்ற பெயர் இறைவனுக்கு வழங்கப்படுகிறது. சுவாமிகள் தனது வேண்டுகோளுக்கிணங்க ' அங்கணாள ' என விளித்தமை காண்க.

பெத்தம் (உலகநிலை) முத்தி இரண்டினும் உயிர் விடயிக்கும் விடயங்களை முதல்வன் உடனின்று விடயிப்பன். பெத்தத்தில், அவன் (இறைவன்) இவனாய் நின்று விடயிப்

பன். ஆகலின், அவை அவனுக்கின்றி இவனுக்காயின. முத்தியில், இவன் (உயிர்) அவனுய் நின்று விடயித்தலின், உலக விடயங்கள் யாவும் இவனுக்கின்றி அவனுக்காயின. 'காணும் காரணங்களெல்லாம் பேரின்பமெனப் பேணுமடியார் பிறப்பகலக் - காணும் பெரியான்' என்னும் திருவாக்கு முத்திநிலைபற்றி எழுந்தது காண்க. அதுவே ஈண்டு புங்கமான போகம் எனப்பட்டது. புங்கம் - உயர்ச்சி; மேன்மை. போகம் - நிற்பாராநந்தபோகம். வீட்டு நிலையில் அத்துவிதக் கலவியால் விளையும் பேரின்பம். ஆரா அன்பின் அரன் கழல் நிற்றற்குப் பயன் நிற்பாராநந்த போகமேயாகலின், அது ஒன்றே வேண்டும் என்பார் 'புங்கமான போகமே' என முடிந்த முடிபாகக் கூறியருளினர். ஈண்டும் ஏகாரம் தேற்றம். முத்தி நிலையில் அவனே போகமாகின்றான் என்பது "ஏகமாய் நின்றே இணையடிகள் ஒன்றுணரப் போகமாய்த்தான் விளைந்த பொற்பினன்' என்னும் சிவஞானபோதத் திருவாக்காலறிக. போகமே என்றதை விளியாகவைத்து உரைத்தலும் ஒன்று. இக்கருத்துபற்றியன்றே 'சிந்தையும் தெளிவுமாகித் தெளிவினுட் சிவமுமாகிவந்த நற்பயனுமாகி' 'எந்தை எம்பிரானே! என்றுள்குவாருள்ளத்தென்றும் சிந்தையும் சிவமுமாவார்' என்பன போன்ற அருள் வாக்குகள் எழுந்தன.

"எம்பிரா னென்னதே கொண்டென் னுளேபுகுந்து நின்றிங்
கெம்பிரா னட்டஆடி யென்னுளே உழிதர் வேலை
எம்பிரா னென்னைப் பின்னைத் தன்னுளே காக்குமென்றால்
எம்பிரா னென்னி லல்லா லென்செய்கே னேழை யேனே"

—அப்பர் தேவாரம்.

["புணர்ப்ப தொக்க" என்ற இத் திருவாசகச் செய்யுட்குத் திருப்போரூர்ச் சந்நிதிமுறை யருளியவரும், பேரூர்ச் சாந்தலிங்க சுவாமிகள் அருளிய சாத்திரங்கட்கும் ஒழிவிலொடுக்கத்திற்கும் உரையருளியவருமாகிய ஸ்ரீமத் - சிதம்பரசுவாமிகள் செய்தருளிய விருத்தியுரை அடுத்த இதழில் வெளியிடப்பெறும்—ப - ர்].

மனிதனின் நிலை

[சி. கதிர்வேலு முதலியார் எழுதியது]

(உரிமையுள்ளது)

மனிதனுடைய தேகத்திற்குச் சிரசு முக்கிய ஸ்தானமாகும். அந்த முதல் ஸ்தானமாகிய சிரசில் இரண்டு நேத்திரங்களுக்கு மத்திய பாகமாயுள்ள உள்பாகத்தில் ஒரு பெரிய சக்தியிருக்கிறது. அந்தச் சக்தி தன் பலத்தினால் சிரசிலிருந்து பாதம்வரையிலுமாய் அமைந்த தேக தத்துவங்களை நடத்துகிறது. மேற்சொன்ன மத்திய ஸ்தானத்திலிருக்கும் அந்தப் பெரிய சக்திக்கும் தேக தத்துவங்களுக்கும் (அதாவது தேகத்திற்கும்) சம்பந்தமிருக்கிறது. அந்த முதல் சக்தி மனம் என்னும் தத்துவத்தின் மூலமாய்த் தேகத்தின் தத்துவங்களுக்கு வேண்டிய சக்திகளைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. பிண்டம் கருவில் அமையும்போது சிரசிலிருக்கும் முதல் சக்தியிலிருந்து சக்தியுண்டாகி, மனதில் சம்பந்தப்பட்டு, அந்த மனம் அக்கினியாக எழும்பி, நாத பிந்தின் மூலமாய்ப் பிண்டத்திற்கு வேண்டிய தத்துவங்களையும் ஜீவனையும் கொடுத்துப் பிண்டத்தைப் பத்து மாதம்வரை பூரணமாய் வளரச் செய்கிறது. மனம் அக்கினியாகக் கிளம்பினாலொழிய, சிரசிலிருக்கும் சக்தியை இழுத்து ஜீவனாக நாதபிந்தில் கலக்கச் செய்யமுடியாது. இந்தத் தேகம் உண்டானதற்கு மனமே காரணமாயிருக்கிறது.

மனிதனுடைய ஆயுளும் தேகத்தின் தத்துவங்களின் குற்றங்களும் வியாதிகளும் மனதின் குற்றத்தினால் உண்டாகின்றன. அது எப்படியென்றால் கயிற்றைப் பாம்பாகப் பார்க்கும் சமயத்தில் மனதினுடைய அசைவு மாறுபட்டுப் பாம்பு என்னும் நினைவில் நின்றபோது அந்த மனம் தேகத்தினிடமாயிருந்து உதித்தபடியால் அந்த உதித்த இடமாகிய தேக தத்துவங்கள் அதற்குத் தக்கபடி உண்டாகி இரத்த ஓட்டத்தைக் கெடுக்கிறது. அதனால் நினைத்தவனுக்கு இரத்தக் கொதிப்புண்டாகி அவன் கஷ்டத்தை யடைகிறான். இதனால் மனமானது பார்க்கவேண்டிய நிலையினின்றும் மாறி அதற்கு விரோதமாய் நடப்பதால் தேகமாகிய தத்துவங்கள் மாறுபடுகின்றன என்னும் விஷயம் நன்றாய்த் தெரிகிறது. ஆகையால் தேகத்தில் எவ்வித வியாதிகளும் நாடிக் குற்றங்களும் உண்டாவதற்கு மனந்தான் காரணமாயிருக்கிறது. மனமானது பார்க்கவேண்டிய விதமாகப் பார்த்துச் சரியான பார்வையில் நின்றால் தேகத்திலுள்ள இயந்திரமானது பழுதுபடாமல் கிரமமாக ஓடும். இயந்திரத்தை ஒழுங்காக வைத்துக்கொள்ள வேண்டுமானால் மனதை ஒழுங்கான நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்தவேண்டும். அது எப்படியென்றால் தராசின் இரண்டு தட்டுகள் மாறுபட்டு நின்றால் அதில் சேர்ந்துள்ள முள்ளானது சாய்ந்து நிற்கிறது. தட்டுகள் சமமாக நின்றால் தராசின் முள்ளும் நேராக நிற்கும். தராசின் முள்ளை நேராக நிறுத்த வேண்டுமானால் அதின் தட்டுகளை எடையில் சமப்படுத்தவேண்டும். எப்படியென்றால் தராசின் முள்ளுக்கும் இரண்டு தட்டுகளுக்கும் ஒரு சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது முள்ளைச் சாய்க்க வேண்டுமானால் தட்டுகளை எடையினால் பேதப்படுத்த

வேண்டும். தட்டுகள் எடையில் சமமாகயிருந்தால்தான் முள்ளானது நேராக நிற்கமுடியும். இப்பொழுது தராசின் தட்டுகளுக்கும் முள்ளுக்கும் ஒரு சம்பந்தமிருப்பதுபோல உலகத்திற்கும் மனதிற்கும் ஒரு சம்பந்தம் உண்டு. தராசின் தட்டுகளை எடையில் சமப்படுத்தித் தராசின் முள்ளைச் சரியாக நிறுத்துதல்போல நம்மைச் சூழ்ந்திருக்கும் உலகத்தைப் பேதமின்றிச் சமப்படுத்தினால் முள்ளாகிய மனமானது நேராக நிற்கும். அப்படி நின்ற மனதினால் தேகத்திற்குள்ளிருக்கும் தத்துவங்கள் ஒழுங்காக நடைபெறும்.

ஒருவன் தனது மனதை இயற்கைக்கு விரோதமாகச் சலிக்கச் செய்வானானால் தத்துவங்கள் மாறுபட்டுச் சுழலும்.

“சுழித்துக் கொடுக்கவே சுற்றிக் கழியும்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்து
உழற்றிக் கொடுக்கும் உபாய மறிவார்க்கு
அழற்றித் தவிர்ந்துடல் அஞ்சன மாமே”

“அஞ்சனம் போன்றுடல் ஐயறும் அந்தியில்
வஞ்சக வாத மறும்மத்தி யானத்தில்
செஞ்சிறு காலையில் செய்திடில் பித்தறும்
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே”

என்று கூறியிருக்கிறது. ‘சுழித்துக் கொடுக்கவே’ என்றால் மனதை அதன் சலனத்தின்படிச் சலிக்கவிடாமல் கிரமமாக நிற்கச்செய்யச் சுழற்றி இழுக்க வேண்டுமென்று அர்த்தமாம். சுற்றிக் கழியுமென்றால் இப்படி மனதை அதன் போக்கில் விடாமல் சரியான நிலையில் சுழித்து இழுத்த போது அந்த மனமிருக்கிற தேகஇயந்திரத்திலிருக்கும் குணகுற்றங்கள் நீங்கி ஒழியுமாமென்று அர்த்தமாய். மனதை ஒழுங்கான நிலையில் நிறுத்தாத தோஷத்தினால் மனிதன்

க்ஷீணமடைகிறான். மனம் எப்படி அசைகிறதோ அப்படியே தேகமும் அசைந்து ஆடும். இரத்த ஓட்டத்தை நன்றாக ஓடச் செய்ய வேண்டுமானால் இரத்தம் ஓடுகிற கிரமத்தைத் தெரிந்து அந்த அசைவை மனதில் நிறுத்தினால் அந்த அசைவில் மனம் சம்பந்தப்பட்டு அந்த ஓட்டத்தை அதிகப் படுத்தும்.

○ ○ ΛΛΛ ○ ○ ΛΛΛ ○ ○ ΛΛΛ இவ்விதமாக இரத்தமானது தேகத்தில் சஞ்சரிக்கிறது. மனம் இரத்தத்தை உண்டு பண்ணினதால் மேலே குறித்த வடிவத்தில் மனதை அசையும்படிச் செய்ய வேண்டும். மனம் அப்படி அந்த வடிவத்தில் அசைந்தபோது அந்த இரத்த அசைவானது அதிகரிக்கும். மேலே குறித்த வடிவத்தில் மனதை அசைப்பதற்கு இரத்தத்தின் ஓட்டத்தை ஒரு வடிவமாக எடுத்துக்காட்டி அது ஒரு திறவு கோலாகக் காட்டப் பட்டது. இந்த வடிவம்போல மனதை அசைத்து அந்த வடிவம்போல ஓடுகிற இரத்தத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். இப்படியே தேகத்தில் ஓடுகின்ற ஒவ்வொரு தத்துவத்திற்கும் ஒவ்வொரு விதமாக அடையாளமிருக்கின்றது. எந்தத் தத்துவம் நமக்குச் சரியாக ஆகவேண்டுமோ அத் தத்துவத்தின் வடிவத்தில் மனதை அசைக்கச் செய்தால் மனதின் சகாயத்தினால் அத்தத்துவம் சுத்தமாகும். அதனால் தேகம் சுகப்படும்.

பிந்தைக் கட்ட வேண்டுமானால் ○———○———○——— ○———○———○———○———○ இவ்விதமாக மனதை அசைக்கச் செய்ய வேண்டும். இப்படியே சில நாட்கள் அரைமணி நேரம் மனதை ஒரே இடத்தில் நிறுத்தாமல் மேல் குறித்த வடிவத்தில் மாறி மாறி அசைத்துக்கொண்டேயிருக்க

வேண்டும். அதனால் அந்தந்த வடிவங்களில் மனம் அசைவதினால் அந்தந்தத் தத்துவங்கள் கிரமமாக நடக்கும். மேற்குறித்த அடையாளத்தை ஒரு கம்பம்போல் நேராகத் தன் நினைவில் நிறுத்தி அதில் மனதை அசைக்க வேண்டும்.

பிண்டம் வளரும் போது, தாய் தந்தையருடைய மனம் ஒன்றுபட்டு அவர்களால் ஒன்றுபடுத்திய நாதபிந்தில் அமைந்து, தத்துவங்களுக்கு வேண்டிய அசைவுகள் உண்டு பண்ணுவதற்கு அணுக்களை மனதினால் அசைத்து அசைத்து, அணுக்களைத் திரட்டித்திரட்டி, மேற்குறித்த அடையாளங்களைப்போல் ஒவ்வொரு தத்துவங்களின் அசைவுகளைச் சேர்த்துப் பிண்டத்தில் அமைத்து அதை வளரச்செய்கிறது. ஆகையினால் மனதை அவ்வித அடையாளங்களில் நிறுத்தி அசைக்கச் செய்தால் தத்துவங்கள் ஒழுங்காக நடக்குமென்று சொல்ல ஏற்பட்டது. மனதை இவ்வடையாளங்களில் அசைக்கும்போது முதலில் இரண்டு கண்களுக்கு மத்தியிலிருக்கும் உள்பாகத்திலுள்ள சக்தியின் பலத்தினால் மனதை அசைத்து, அந்த மனதினால் தேகத்தின் தத்துவங்களை அசைக்கவேண்டும்.

மனிதனுடைய மனோசலனம் முதல் முதல் மூளையின் வழியாகப்போய், அங்கிருந்து தேகத்தின் தத்துவங்களுக்குச் சென்று அவைகளை அசைக்கின்றது. மனதின் அசைவு மூளையிலிருக்கிறது. ஒருவனுக்கு எந்த வியாதி வந்தாலும் முதலில் மூளைகெடும். அப்பொழுது அவனுக்கு நல்ல அறிவும் சாந்தமுமிராது. அதற்கு இதுவே காரணமாயிருக்கிறது. இரத்தம் கொதிப்பானல் மயக்கமுண்டாகிறது. மனம் ஒழுங்காயிருந்தால் சிரசிலுள்ள மூளையும் ஒழுங்காயிருக்கும்; அதோடு சம்பந்தப்பட்ட நாடி நரம்பு இரத்தங்

களும் ஒழுங்காயிருக்கும். வியாதியில்லாமலிருக்கிறவன் நல்ல புத்தி சுவாதீனத்தோடு எல்லா விஷயங்களையும் நடத்துகிறுனென்று அறிந்துகொள்.

மண், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம் ஆகிய இவ்வைந்து பூதங்கள் அண்டங்கள் முழுமையும் முட்டித் ததும்பிப் பரவியிருக்கின்றன. இந்தப் பஞ்சபூதங்கள் ஒன்றுக்கொன்று இணைபிரியாமல் ஓடுகின்றன. இப்படி அமைந்த அண்டத்தில் மனிதன் வரை இந்தப் பஞ்சபூதங்களை அவைகளின் அளவிற்குத் தக்கவாறுக அடக்கி அகம் புறம் ஒன்றுக வைத்துக்கொண்டிருக்கிறது. ஒரு வித்தை எடுத்து நாம் பார்ப்போமானுல் அவ்வித்திற்குள் மேற்சொன்ன அண்ட முழுமையும் ஓடுகின்ற பஞ்சபூதங்களாகிய யந்திரம் அடங்கியிருக்கிறது. இதைப் போலவே மனிதன் தேகத்திற்குள்ளும் பஞ்சபூதமாகிய யந்திரம் அடங்கியிருக்கின்றது. விசாலமாய்ப் பரவியிருக்கும் பஞ்சபூதங்களாகிய அண்டம் எங்கும் ஒரே மயமாயிருப்பதால் அதற்கு அதாவது அந்தப் பூதங்களுக்குப் போக்குவரத்து இல்லை. மனிதன் தேகத்திற்குள் அது எப்படி அடங்கியிருக்கிறதென்றுல் சமுத்திரத்தில் ஒரு குடத்தை அழுத்திஞல் அந்தக் குடத்திற்கு உள்ளும் புறம்பும் அந்த ஒரே ஜலம் சூழ்ந்திருக்கிறது. மறுபடியும் அந்தக் குடத்தைச் சமுத்திர ஜலத்திலிருந்து எடுத்துவிட்டால் அந்தக் குடத்திற்குள் இருந்த ஜலம் காணப்படவில்லை. எப்படிக் குடத்திற்குள் ஜலம் அடங்கினதோ, அந்தக் குடத்தை ஜலத்தைவிட்டு எடுத்தபோது அது எப்படி அடங்காமல் போயிற்றே அதைப்போலத் தாயின் கர்ப்பத்தில் சமுத்திரத்திலழுத்திய குடத்திற்கு அகம் புறம் ஜலம் இருப்பதுபோல

அண்டசராசரத்திலுள்ள பஞ்சபூதம் அடங்கி யிருக்கிறது. அந்தப் பஞ்ச பூதத்தில் நாதவிந்து கலந்து உண்டான அசைவு, அசைத்து அங்குள்ள தத்துவங்களை இழுத்து இழுத்துக் குவிக்கிறது. அதனால் தத்துவங்களுண்டானது சமுத்திரத்தின் ஜலம் குடத்திற்குள் தங்கினதற்கு ஒப்பாகும். அப்படி எடுத்த அசைவைப் பஞ்சேந்திரியங்களின் வழியாய் மனிதன் நாளடைவில் செலவுசெய்து கடைசியாக மரிக்கிறான். இது குடத்தைச் சமுத்திரத்திலிருந்து எடுத்தபோது குடத்திற்குள் ஜலம் காணாததற்கு ஒப்பாகும். ஜலத்திலிருந்து குடத்தை எடுத்தபோது குடத்திற்குள் ஜலத்தைக் காணாததுபோல மனிதன் தேகத்திற்குள்ளிருக்கும் பஞ்சபூத இயந்திரமானது மனிதன் இறந்தபோது அவனுக்குள் காணப்படவில்லை. அப்பொழுது தேகம் பிணமாகிறது. மனிதன் இறந்தபோது அண்டசராசரத்திலுள்ள பஞ்சபூத இயந்திரம் எங்கும் பரவியுள்ளதால் அதற்குப் போக்குவரத்துக் கிடையாது. போக்குவரத்து இல்லாத இயந்திரம் மனிதன் தேகத்தில் எப்படி யிருந்தது என்றால் சமுத்திரத்தில் ஜலத்தின் அசைவினால் குமிழி உண்டாகிறது. உண்டான குமிழி மறுபடியும் அடங்குகிறது. இந்தக் குமிழியின் நிலைகள் உண்டானபோதும், அழிந்தபோதும் சமுத்திரத்தின் ஜலம் குறையாமல் எங்கும் நிரம்பியிருக்கிறது. குமிழி உண்டாகும்போது அசைவினால் ஜலத்தைத் திரட்டிக் குவிக்கச் செய்கிறது. அப்பொழுது அகண்டமாய்ப் பரவியிருக்கிற ஜலத்திற்குப் போக்குவரத்து இல்லை. அது இருந்த இடத்திலேயே யிருக்கிறது. இதைப்போலவே அகண்ட பஞ்ச பூதத்தில் ஸ்திரீயானவள் அமிழ்ந்திருக்கிறாள். குடத்

திற்குள் அகமும் புறமும் சமுத்திரத்தின் ஜலம் எப்படிப் பரவியிருக்கிறதோ அதைப்போலவே ஸ்திரீயின் தேகத்தின் உள்ளும் புறமும் அகண்ட பஞ்சபூதமானது நிரம்பியிருக்கிறது. கருதரிக்கும்போது அசைவினால் பஞ்சபூதங்கள் அசைந்து ஸ்திரீயின் தேகத்தின் உள்ளும் புறமும் பரவியிருக்கிற பஞ்சபூத இயந்திரத்தின் அசைவினால் அங்குள்ள பஞ்சபூதங்களைத் திரட்டிக் குவித்து ஒரு குமிழி உண்டாக்குகிறது. அப்படி உண்டான குமிழியாகிய நாதபிந்தின் அசைவு மேலும் மேலும் பத்து மாதத்தில் வளர்ந்து மேற்சொன்ன அகண்ட பஞ்சபூத இயந்திரத்தில் பிண்டம் ஊடுருவிக் கலந்து ஜனிக்கிறது. எங்கும் பரவியிருக்கின்ற பஞ்சபூதங்களுக்குப் போக்குவரத்து இல்லையென்றும் போக்குவரத்து இல்லாத பஞ்ச பூதத்தில் ஓர் அசைவு உண்டாகிப் பஞ்ச பூதத்தைத் திரட்டிக் கர்ப்பத்தில் பிண்டத்தை வளரச்செய்கிறதென்பதும் இதனால் தெரிகிறது.

ஒரு வித்வான் சங்கீதம் பாடும்போது அவன் தேகத்திலிருந்து ஒலி உண்டாகிறது. எங்கும் பரவியிருக்கின்ற பஞ்ச பூதத்தில் ஒரு பூதமாகிய வாயு தத்துவத்தைச் சங்கீத மூலமாய் அவன் அசைக்கிறான். அப்பொழுது தனது தேகத்திற்கு அகமும் புறமும் பரவியிருக்கிற பஞ்ச பூதத்தில் வாயு பூதம் மாத்திரம் அதிகமாய் அசைக்கப்படுகிறது. அப்பொழுது அந்த சப்தம் வித்வானைச் சூழ்ந்திருக்கும் ஜீவர்களின் காதின் மூலமாய் அண்டவெளியில் அசைந்து நுழைகிறது. அண்டவெளியில் யந்திரமானது அசையாவிட்டால் எப்படி மற்ற ஜீவர்களுடைய காது இந்திரியங்களுக்குச் சப்தம் கேட்கும்? இதைப் போலவே மனிதன் தேகத்தில் பஞ்சேந்திரியங்களில் அண்டத்தில் பரவியிருக்கிற

பஞ்சபூதங்களைச் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆகிய தொழில்களாக அறியும்போது அண்டத்தில் பரவி யிருக்கும் ஆகாசம் மனிதன் தேகத்திற்கு உள்ளும் புறம்பு மிருக்கிறது. இதற்கு மத்தியில் உடம்பாகிய போர்வை தடையாக மூடப்பட்டிருக்கிறது. அண்டத்திலுண்டான சப்தத்தை அறிகிறது இதன் காரணமேயாகும். அந்தச் சப் தம் காதினுடைய தத்துவமானதினுல் காதினுல் அறியப்படு கிறது. அண்டத்தில் உண்டான சப்தமும் மனிதனிடத்தி லிருந்து உண்டான சப்தமும் ஆகியஇரண்டும் ஒன்றேயாகும். ஆனுல் இதற்கு மத்தியில் காதானது தடையாயிருக் கிறதே தவிர சத்தமாகிய தத்துவம் ஒன்றுகவேயிருக்கிறது. இப்படியே பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆகிய இத்தொழில் களும் தத்துவங்களும் பேதமின்றி மனிதன் தேகத்தில் உள்ளும் புறமும் ஒன்றுகவே நடக்கின்றன. ஆனுல் அந்தத் தொழில்களுக்கு ஸ்தூலப் பொருள்கள் தடையாய் நிற்கின் றன. அப்படித் தடையாயிருக்கிற ஒரு போர்வை மனித னென்று சொல்லப்படும்.

ஜீவனுக்குப் போக்கு வரத்து இல்லை. ஆனுல் ஜீவன் வெவ்வேறு தேகங்களைப் போர்வையாக அடைகிறது. ஏனென்றுல் ஜீவனுக்குப் போக்குவரத்து இல்லாமலிருந்தா லும் அது, அண்டசராசரங்களில் பரவியிருக்கின்ற பஞ்ச பூதங்களான தத்துவங்களில் தனதுமனதின் சலனத்துக்குத் தக்கபடி அசைந்து எங்கும் பரவியிருக்கிற அணுக்களைக் கூட்டித்திரட்டி அண்டவெளியிலேயே கலந்து கர்ப்ப ஸ்தானத்தில் அந்த இடத்திலேயே அமைகிறது. ஜீவன் கர்ப்ப ஸ்தானத்தில் அமையும்போது அந்தக் கர்ப்ப ஸ்தான மாகிய வெளியும், ஜீவன் பிறப்பதற்குமுன் தனது சலனத்

தின்படி கூட்டித் திரட்டிய வெளியும் ஒரே தன்மையா யிருப்பதினால் அதற்குப் போக்குவரத்து இல்லையென்று சொல்லக் காரணமாயிற்று. சமுத்திர ஜலத்தில் ஒரு குடத்தின் வாயை மூடி அதில் மிதக்கவிட்டால் அந்தக் குடமானது அமுங்காமல், வெளியின் அசைவு குடத்தின் எடைக்குத் தக்கவாறாக அசைத்து அந்தக் குடத்தைச் சமுத்திர ஜலத்தில் ஒரு இடத்திலேயே நிறுத்தாமல் பல ஸ்தானங்களுக்குத் தள்ளிக்கொண்டு போகிறது. இந்தக் குடம் சமுத்திர ஜலத்தில் ஒரு இடத்தில் நின்ற சமயம் ஒரு ஜீவனுடைய ஒரு பிறப்பாகும். அந்த இடத்தைவிட்டு மற்றோரிடத்திற்குப் போக அசையும் சமயம் ஜீவன் ஓரிடத்தை விட்டு மற்றொரு கர்ப்ப ஸ்தானத்தில் நுழைய அசைவதற்கு ஒப்பாகும்.

ஜீவனுக்கு மறுஜென்மமில்லையென்று சொல்லமுடியாது. ஸ்தூலம், சூக்ஷ்மம் இல்லையென்றும் சொல்லமுடியாது. ஜீவன் மறு ஜென்மத்தை யெடுக்கிறதும் ஸ்தூலத்தில் சூக்ஷ்மமிருக்கிறதென்பதும் நிச்சயமே. ஏனென்றால் தூங்கும்போது மனிதன் சுழுத்தி அவஸ்தை அடைகிறான். அப்பொழுது தனது தேகத்தையும் உலகத்தையும் மறக்கிறான். இடையில் சொற்பனமென்னும் ஒரு அவஸ்தையில் ஜீவன் அமைகிறது. இதனால் ஸ்தூலத்தைவிட்டு சூக்ஷ்மமாகிய சொற்பனவஸ்தையில் ஜீவன் அமைகிறதென்று நன்றாகத் தெரிகிறதல்லவா? ஸ்தூலத்தைவிட்டு சூக்ஷ்மம் தனியாகப் பிரியும் சக்தியும், பிரிந்து அண்டவெளியில் ஊடுருவிப் பாயும் சக்தியும் ஜீவன் பெற்றிருக்கிறது. இந்த இலக்கணத்தினால் மஹானீயர்கள் ஸ்தூலத்தைவிட்டு ஜீவனை அண்டவெளியில் ஊடுருவிப் பாயச்செய்து எத்த

லேயோ ஆயிரம் மைலுக்கு அப்பாலுள்ள விஷயங்களை அறிந்து மறுபடியும் ஸ்தூலத்திற்குள் புகுந்து அவ்விஷயங்களை வாயின் மூலமாய் வெளிப்படுத்துகிறார்கள். இப்படி ஓரிடம்விட்டு ஓரிடம் செல்லும் சக்தி ஜீவனுக்கு இருப்பதினால், அது ஒரு ஜென்மத்தைவிட்டு மற்றொரு ஜென்மத்தை நிச்சயமாய் அடைகிறதென்பதை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஜீவனுக்கு ஸ்தூலதேகத்தை விட்டு அண்ட சராசர வெளி முழுமையும் ஊடுருவிப் பாய்ந்து செல்லச் சக்தி உண்டு.

விசாலமாயுள்ள உலகம் மனிதனுடைய மனோசலனமாயிருக்கிறது. மனம் உலகமாய் நினைத்தபோது அந்த மனம் உலக விஷயத்திலும் நாம ரூபங்களிலும் கலந்து உலகமாய் மாறுபடுகிறது. மனதை உலக விஷயங்களிலிருந்தும் நாமரூபங்களிலிருந்தும் நீக்கி நின்றால் உலகத்திற்கு அதீதமாயுள்ள அகண்ட ஆத்ம சொரூபத்தில் கலந்து நிற்கும். இதனால் மனம் எந்த நிலையில் மாறி நிற்கிறதோ அந்த வடிவமாக அது மாறி நிற்கும். உலகத்தைத் தள்ளி நிற்பதற்கு மனந்தான் ஒரு பெரிய கருவியாயிருக்கிறது. மனதிற்கும், உலகத்திற்கும், உலகத்தின் தொழில்களுக்கும் சம்பந்தமிருப்பதனால் இப்படிச் சொல்ல நேரிட்டது. உலகத்திலுள்ள எல்லா ஜீவர்களையும் தாது மூலங்களையும் ஒரு பெரிய அகண்டாகார ஆத்ம சக்கரம் ஆட்டிப்படைக்கிறது. அந்த அகண்டாகார ஆத்ம சொரூபம் உலகத் தொழில்களிலும், மனிதன் தேகத்திலுள்ள மனதிலும் கலந்து ஆடுகிறது. இந்த ஒரே அகண்ட ஆத்ம சொரூபம் மனிதனிடத்திலுள்ள பஞ்சேந்திரியங்களின் தொழில்களை நடத்துகிற ஜீவனை அசைக்கிறது. அந்த அசைந்த ஜீவன் மூலமாய்ப் பஞ்சேந்

திரியங்களாகிய அறுசுவைகள் உண்டாகின்றன. இந்த அறுசுவைகளுக்கும் மனம் காரணமாயிருந்து, அந்த மன திற்கு ஆன்மா காரணமாயிருந்து, மனிதன் அந்த மனதின் மூலமாய் அறுசுவையை அறிகிறான்.

திராட்ச ரசத்தின் சுவையை மனமானது நாக்கினிடமா யிருந்து அறிகிறது. நாக்கினிடமாயிருந்து உண்டாகிற சுவையை மனம் அறிவதினால் அந்த மனம் அண்டசராசர வெளியில் பரவி மற்ற எல்லா ஜீவர்களிடத்திலும் கலந்திருக் கிறது. ஒருவன் ஜலத்தை வேறுவிதமாக மாற்றுவதற்கு இந்த மனந்தான் காரணம். எல்லா ஜீவர்களிடத்தி லும் இருந்து உண்டான அறுசுவைகளை அறியும் மனமும் ஒரு வஸ்துவை வேறு வஸ்துவாக மாற்ற விரும்புகிற மனித னுடைய மனமும் ஒன்று யிருப்பதனால், வஸ்துவை மாற்ற விரும்பினவனுடைய மனம் எந்த சுவையில் எந்த வஸ்துவை மாற்ற விரும்பினானோ அந்த வஸ்துவின் சுவை எல்லா ஜீவர்களிடத்திலும் உள்ள மனதைத் தூண்டி அசைத்து அந்த வஸ்துவின் சுவையைக் காட்டுகிறது. அறுசுவைகள் அண்ட சராசர முழுதுமுள்ள வெளியில் பரவி நிற்கின் றன. அண்டத்தில் அறுசுவைகள் பரவி யில்லாவிட்டால் பூமியில் போடும் வித்திலிருந்து உண்டாகும் கொடி செடி மரம் முதலியவைகளில் உண்டாகும் காய்களுக்கும் சுவை உண்டாக முடியாது. மனிதன் உள்ளும் புறம்பும் ஒரே வெளி கலந்திருப்பதனால் காய் கனிகளின் சுவையை அவன் அறிகிறான். மனிதனிடத்திலும், மனிதனுக்கு வெளியே உள்ள பொருள்களிடத்திலும் உண்டான அறுசுவைகள் ஒன்றுயிருப்பதனால் அண்டத்திலுள்ள காய் கனிகளிலுள்ள சுவை எதுவோ அந்தச் சுவையையே மனிதன் அப்படியே அறிகிறான்.

அறு சுவையில் ஒரு சுவையை அதாவது துவர்ப்பை மனிதன் அறியும்போது, மனிதனுடைய மனம் அந்தச் சுவையில் பதிந்து உணருகிறது. அப்பொழுது அந்த மனம் காரணமா யிருப்பதினாலே மனதை மேற்படி சுவையினிடத்தில் பதியச் செய்யாமல் அதற்கு அதீதமாயுள்ள ஆன்ம வெளியில் மனதைப் பதியச் செய்வதால், மனம் அந்தச் சுவையை அறிய முடியாது.

வஸ்துக்களின் சுவையை மாற்றும்படிச் செய்வதற்கு மனம் காரணமாயிருக்கிறது. மனோதத்துவப் பொருளில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய இவ்வைந்தும் கலந்து இருக்கின்றன. இந்த ஐந்து பொருள்களில் மனம் சம்பந்தப்படுகிறபோது பஞ்ச தொழில்களின் குணங்களை அறிகிறது. மனமாகிய பொருளில் அதாவது தத்துவத்தில் ஐந்து பூதங்கள் கலந்திருப்பதினாலே அந்த ஒரே மனம் ஒழுங்காக எந்த சிருஷ்டியிலும் பதியாவிட்டால் அதனால் பஞ்ச கிருத்தியத்தின் தொழில்கள் நடந்து சிருஷ்டிக்க முடியாது. சிருஷ்டிக்கு மனம் காரணமாயிருக்கிறது. ஒரே மனதில் அண்டசராசரங்களும் அடங்கியிருக்கின்றன. அப்படி அடங்கியிருப்பதினால் மனம் எந்த சிருஷ்டிகளிலும் நன்றாகப் பதியாவிட்டால் சிருஷ்டிகள் உண்டாகா. மனம் எண்ணங்கள், உலகத் தோற்றங்கள் ஆகிய இவைகள் மூன்றும் ஒரு பொருட்கிளவிகளாம். மனம் சலித்து எண்ணங்களாக மாறி அந்த எண்ணங்களிலிருந்து உலகத் தோற்றங்கள் உண்டாயின. உலகத் தோற்றங்களும் அவைகளில் உண்டாகிய காய் கனிகளின் சுவைகளும் மாற வேண்டுமானால் எண்ணங்களை மனதினிடத்தில் ஒடுக்கி, அந்த மனதைச் சித் வெளியில் ஒடுக்கினால் உலகத்தோற்றங்களும் அறுசுவைகளும் தோன்றாமல் மாறிப்போம்.

யாதொரு உதவியுமின்றி ஒரு அசைவு தானாகவே தன்மயமாய் இந்த அண்டப்பெரு வெளியில் சுழன்று கொண்டிருக்கிறது. அதனால் இந்தப் பூமி உள்பட ஒன்பது கிரஹங்களும் சுழலுகின்றன. இப்படிச் சுழன்றுகொண் டிருக்கும் வல்லபத்தின் உதவியினாலே ஒன்பது கிரஹங் கள் சுற்றுகின்றன. அந்தக் கிரஹங்களினாலே பூமியில் தாது மூல ஜீவன்கள் உண்டாகின்றன. இப்படி ஒன்பது கிரகஹங் களுக்கும் ஒரு பெரிய வல்லபத்திற்கும் பிடிப்புண்டாகியிருப் பதினாலே; இந்த அண்டத்திலுள்ள பூமி முதல் ஆகாசம் வரையிலும் உண்டான பஞ்ச பூதங்கள் உண்டாயின.

கிரஹங்களே பஞ்ச பூதமென்று சொல்லலாம். எப் படியென்றால் கிரஹங்களென்பன பூமியைப்போன்று பொருள்களா யிருக்கின்றன. அந்தப் பொருள்களாகிய கிரஹங்களின் அசைவினால் ஏற்பட்ட தொழிலின் சக்தி யைப் பூதமென்று சொல்லப்படும். அது எப்படியென்றால் விளக்கில் எரியும் சுடர் 1, அதன் பிரகாசம் 1, ஆக இந்த விளக்கினிடத்தில் இரண்டு தத்துவங்கள் அடங்கி யிருக் கின்றன. இதைப் போலவே கிரஹங்கள் 1, அவைகளின் அசைவாகிய பஞ்ச பூதங்கள் 1. கிரஹங்களின் சலனமே பஞ்ச பூதங்களாகச் சலித்து அண்ட சராசரத்திலுள்ள தாது மூல ஜீவன்களைச் சிருஷ்டிக்கவும் அழிக்கவும் செய் கிறது. இப்படி உண்டாகும் மூலப்பொருள்கள் அரிசி, கேழ்வரகு, கோதுமை, கம்பு முதலிய தானியங்களாம். தானியங்களை மனிதன் உட்கொள்ள, அவைகளினால் நாத பிந்துக்கள் தனது தேகத்தில் இரண்டாகப் பிரிகின்றன. இப்படி யிருக்கும் நாத பிந்தாகிய பொருள்கள் எவ்விடத்தி லிருந்து உண்டாயினவென்று ஆராயுமிடத்து, அவை அண்

டத்தின் அதாவது பூமியின் அசைவினால் அணுக்கூட்டங்கள் சேர்ந்து சேர்ந்து வளர்ந்து உண்டாயினவென்று தெரிய வருகிறது. இந்தத் தானியங்கள் உண்டாகா விட்டால் மனிதன் ஜீவிக்க முடியாது. ஏனென்றால் அவைகளினா லேயே மனிதன் சிருஷ்டிக்கப் பட்டதனால் இப்படிச் சொல்ல ஏற்பட்டது. தானியங்களை உண்டாக்கினது மூலப் பொருளாகிய ஒரு பெரிய வல்லபமாகும். அந்த வல்லபத்தி னாலே மனிதன் தனது எண்ணங்களினால் செய்தவினைக் கீடாய் அதோடு சுழன்று நாதபிந்தாகிய தாதுக்களுடன் கலந்து ஜீவனாகப் பிறக்கிறான்.

அண்டப்பெரு வெளியில் ஒரு தனிப்பெரிய வல்லபம் தனக்குத் தானாகவே சுழன்று கொண்டு அணுக்களை, அவற் றின் பாகுபாட்டிற்குத் தக்கவாறாக, அண்டசராசர முழுமை யும் அசைத்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனித னுடைய மனோசலனமாகிய எண்ணங்கள் பர வெளியின் அணுக்களோடு கலந்து அசையும். இப்படி அசைந்து கொண்டிருக்கும் எண்ணங்களின் சலனம் அல்லது அசைவு மனிதன் இறந்தபோது அந்த எண்ணங்களுடன் கலந்து தானியங்களின் வழியாக நாதபிந்தில் சேர்ந்து கருவில் அமைந்து, அந்த அசைவுகளாகிய எண்ணங்களோடேயே பூமியில் மறுபடியும் ஜனிக்கிறான். ஏனென்றால் ஔஷதிகள் அண்டப்பெரு வெளியில் பெரிய வல்லபத்தினால் அசைந்து உண்டாகின்றன. அப்படி உண்டாகின்ற ஔஷதிகளாகிய தானியங்களை மனிதன் உட்கொள்வதினாலும் அந்த மனோ சலனத்தோடு இந்த ஔஷதியும் கலந்திருப்பதினாலும் ஜீவன் அந்த எண்ணங்களோடேயே நாதபிந்தின் வழியாகக் கருவில் அமைந்து பூமியில் பிறக்கிறான்.

ஒருவன் ஒருவித தானியத்தை மிகப் பிரியமுடன் உட்கொள்கிறான். அதே தானியத்தை மற்றொருவன் வெறுப்புடன் தள்ளுகிறான். காரணம் என்னவென்றால் அண்டப் பெருவெளியில் அசைந்து கொண்டிருக்கும் அணுக் கூட்டங்களுக்கும் உட்கொள்ளுகிற ஜீவனுக்கும் ஒரு சம்பந்தம் இருக்கிறதனால் அதை அவன் விரும்புகிறான்; விருப்பமில்லாதவன் அதை வெறுக்கிறானென்று அறிய வேண்டும்.

ஒருவன் சாத்மீக குணத்தோடு உலக வாழ்க்கையி லிருந்து திடீரென்று இறந்து விடுகிறான். அவன் தனது வாழ்க்கையில் நினைத்த எண்ணங்கள் அண்டப் பெரு வெளியில் பதிந்து அசைந்து கொண்டிருக்கும். அந்த எண்ணங்களாகிய அசைவு ஓஷதியில் அதாவது தானி யங்களில் கலந்திருக்கும். இறந்த ஜீவன் சாத்மீக குணத்தோடு இருந்தபடியால் அந்த ஜீவனுடைய சாத்மீக குணத்தின் அசைவு சாத்மீக பதார்த்தங்களில் போய்ப் பதியும். அப்படிப் பதிந்து உண்டான சாத்மீகப் பாதார்த் தங்களை ஜீவ வாழ்க்கையில் எந்த மனிதன் உட்கொள்ளு கிறானோ அந்த மனிதனுடைய தாதுவில் அணுக்கள் கலந்து அதன் வழியாய் மறுபடியும் பூமியில் வருகிறானென்று அறிக.